Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 04 (07.04.2003) திங்கட்கிழமை இதழ் :186

திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
பலிக்களம்
(திருப்பாடுகளின் காட்சி)
10,11,12,13 ஏப்ரல் 2003
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம். -திருமறைக்கலாமன்றம்.
(சு-767)

### யாழ். மாவட்ட சாதாரண தர நிலைவரம்

## பரவலாக நல்ல முடிவுகள்; ஆங்கிலத்தில் மட்டும் வீழ்ச்சி

நேற்றுமுன்தினம் இரவு முதல் இணையத்தளத்தில் வெளியாகிய க.பொ.த சாதாரணதர பெறுபேறுகளின்படி - யாழ். மாவட்டத்தில் கணிசமான மாணவர்கள் உயர்தரம் பயில தகைமை பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.


இதேவேளை- மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையாத நிலைமை யாழ். மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்பட்டது. அதேவேளை, கணிதபாடத்தில் அநேக மாணவர்கள் விசேட சித்திபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் 10 பாடங்களிலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அப்ப சென்னையில இண்டைக்குப் பிரளயந்தான் எண்டு சொல்லுங் கோவன்.



சுவீடன் நாட்டு பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர்.

# ஜனாதிபதி சந்திரிகா ஜெயலலிதாவுடன் இன்று சென்னையில் முக்கிய சந்திப்பு!



## மாநகரமெங்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்

(சென்னையிலிருந்து நரேந்திரன்)

**இந்தியாவுக்கான பயணத்தை இன்று ஆரம்பிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - இன்று காலை சென்னையில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் முக்கிய சந்திப்பொன்றை நடத்தவிருக்கின்றார். இதனையொட்டி சென்னை மாநகரமெங்கும் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு அதிகரிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் நேற்றிரவு சென்னையிலிருந்து அறிவித்தார்.**

இந்தியாவுக்கான நான்கு நாள் விஜயத்தை இன்று ஆரம்பிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - அங்கு, முக்கிய தலைவர்களுடன் சந்திப்புக்களை நடாத்தவிருக்கிறார்.

தற்போது நடைபெற்றுவரும் - அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுக்கள் மற்றும் அது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி, இந்திய அரசாங்கம் ஆகியவற்றின் நிலைப்பாடுகள் பற்றி பிரதானமாக இச்சந்திப்புக்களில் கலந்துரையாடப்படவிருக்கிறது.

இன்று காலை கட்டுநாயக்கவிலிருந்து புறப்படும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நேரடியாக புதுடெல்கி செல்லாமல் - முதலில் சென்னைக்கே செல்கிறார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



### செப்ரெம்பர் மாதம் வரை நல்ல காலமாம்

## பிரபல இந்திய சோதிடர்களை சந்திப்பதில் சந்திரிகா ஆர்வம்!

இன்று இந்தியாவுக்கான நான்கு நாள் விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா, அங்குள்ள பிரபல சோதிடர்களைச் சந்திக்கவுள்ளதாக 'சண்டே லீடர்' செய்திவெளியிட்டுள்ளது.

தனது அரசியல் எதிர்காலத்தை அறிந்து கொள்வதற்கே இந்தியச் சோதிடர்களை ஜனாதிபதி சந்திரிகா சந்திக்கவுள்ளார். இம்மாத பௌர்ணமிக்குப் பின்னர் செப்ரெம்பர் மாதம்வரை சந்திரிகாவுக்கு நல்ல காலம் இருப்பதாக சோதிடர்கள் கூறியுள்ளனர். இக்காலத்தில் மாற்று அரசு அமைக்க அவர் முயலலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - யாழ். சோதிடர் ஒருவர் சந்திரிகாவுக்கு மந்திரித்த மோதிரம் ஒன்றை வழங்கியுள்ளதாகவும் 'சண்டே லீடர்' செய்தி வெளியிட்டுள்ளது.

## புலிகளின் அரசியல் விவகாரக்குழுவின் அடுத்த சுற்றுப்பயணம் மே மாதத்தில்!

### சுவிஸ், ஜேர்மன், ஸ்பெயின் செல்வர்

சமஷ்டி குறித்து ஆராயும் விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினரின் அடுத்த சுற்று சமஷ்டி ஆராய்வுச் சுற்றுப்பயணம், மே மாதம் முதல் வாரம் ஆரம்பமாகும் என நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மே மாதத் தொடக்கத்தில் ஆரம்பமாகும் இந்தச் சுற்றுப்பயணத்தில் - சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் செல்வர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினரின் முதல் சுற்றுப் பயணம் எதிர்வரும் சனிக்கிழமையுடன் முடிவடையும் எனவும் நோர்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இலங்கை - இந்தியக் கடற்படை உறவு நெருக்கமடையுமென சந்தகிரி நம்பிக்கை

இந்தியக் கடற்படையின் பிரதம தலைமை அதிகாரியான அட்மிரல் மத்வெந்தர் சிங் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார்.

இவருடன் உயர்மட்ட கடற்படை அதிகாரிகள் குழுவொன்றும் வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கை - இந்திய கடற்படைகளுக்கு இடையிலான உறவை வளர்ப்பதில் இந்தக் கடற்படை அதிகாரிகள் குழுவின் வருகை முக்கிய பங்குவகிக்கும் என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார். அட்மிரல் மத் வெந்தர் சிங், கடற்படைத் தளபதி சந்தகிரி பயிற்சிக்காக இந்தியா சென்றிருந்தபோது - அவருக்குப் பயிற்சி ஆசிரியராக இருந்துள்ளார்.

இதேவேளை - தற்போது இலங்கைக் கடற்படைக்கு இந்தியக் கடற்படையின் உதவியும் ஒத்துழைப்பும் பெறுமதியானதாகவுள்ளதாகவும், மேலும் பல உதவிகள் இந்தியாவிடமிருந்து கடற்படைக்குத தேவைப்படுவதாகவும் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்துள்ளார்.

### உதவி அரச அதிபர் பணிமனை திறப்புவிழா

புதிதாக உருவாக்கப்பட்ட காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவுக்கான பணிமனை, இன்றுகாலை 11 மணியளவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜாவும் கலந்து கொள்ளவுள்ளார். (சு)

### அரச அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டது

யாழ்.மாவட்ட அரச அதிபர் பத்மநாதனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான விளக்கத்தை, அவரிடமிருந்து பொது நிர்வாக, மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு கோரியுள்ளது.

சேதமடைந்த தனது வீட்டுக்கு இரண்டுமுறை நஷ்டஈடு பெற்றதாகக் குற்றஞ்சாட்டியே இவருக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)


## கடற்புலிகள் - கடற்படையினர் மட்டக்களப்பில் சந்திக்க ஏற்பாடு

### முக்கிய பிரச்சினைகள் ஆராயப்படும்

கடற்படை அதிகாரிகளுக்கும் கடற்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றை மட்டக்களப்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஈடுபட்டுள்ளது.

வட - கிழக்குக் கடற்பகுதியில் இரு தரப்புகளுக்குமிடையில் ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றிய இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கே இச்சந்திப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

இச்சந்திப்பு, எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. இச்சந்திப்பில் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ பங்குகொள்ளமாட்டார் எனவும் தெரியவருகிறது. தாய்லாந்தில் நடக்கவுள்ள அடுத்த கட்டப்பேச்சுக்களுக்கு முன்னர், கடற் பிரச்சினைகள் தொடர்பான தீர்மானகரமான முடிவுகளை எடுக்கவே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.





சமஷ்டி பற்றி ஆராயச்சென்ற புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர், நோர்வேயின் Samy சிறுபான்மை இனப் பிரதிநிதிகளுடன் எடுத்துக்கொண்ட படத்தை முதலாவதாகவும், நோர்வே இராணுவத் தளம் ஒன்றுக்கு விஜயம் செய்தபோது கொட்டும் பனி நடுவே புலிகளும் நோர்வே இராணுவத்தினரும் எடுத்துக்கொண்ட படத்தை இரண்டாவதாகவும் காணலாம்.







கிளிநொச்சியில் நடைபெற்ற பெண்கள் விவகார உபகுழுவின் கூட்டத்தில் அரசதரப்புக் குழுவின் தலைவி குமாரி ஜயவர்த்தனவை புலிகள் தரப்புக் குழுவின் தலைவி தமிழினி சுப்பிரமணியம் கைலாகு கொடுத்து வரவேற்பதை முதற்படத்திலும், கூட்டத்தில் இருதரப்புப் பிரதிநிதிகளும் கலந்துரையாடுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

# புற்றளை மகாவித்தியாலயத்துக்கு ஹாட்லி பழைய மாணவர் உதவி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளை, புற்றளை மகாவித்தியாலயத்திற்கு ஆயிரத்து இருநூறு ஸ்ரேலிங் பவுண்களை வழங்கியுள்ளது.

1985 ஆம் ஆண்டு முதல் யுத்த அனர்த்தத்தினால் நான்கு வருடத்திற்கு மேலாக ஹாட்லிக் கல்லூரி புற்றளையில் இயங்கிவந்தது. இதற்கு நன்றி தெரிவித்து, பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பாகவே இந்நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளதாக ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் மன்ற தாய்ச்சங்கம் தெரிவித்தது.

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள், எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

16, 17, 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு இப்போட்டிகள் நடைபெறுமென உதவி கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராசா சகல வலயங்களுக்கும் அறிவித்துள்ளார். (34)

## இரு நாட்கள் நடைபெறவுள்ள பிராந்திய இந்து மாநாடு

உலக இந்து மாநாட்டின் பிராந்திய மாநாடு மே மாதம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும இந்து கலாசார அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. யாழ்.குடாநாட்டிலுள்ள சகல ஆலயங்களையும் ஒன்றிணைத்து இம்மாநாட்டை நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிகழ்விற்கு தென்னிந்தியாவிலிருந்து பல இசைக் கலைஞர்களும், வாத்தியக் குழுவினரும அழைக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா வைத்தியசாலை தரமுயர்வு

வவுனியா ஆதார வைத்தியசாலை, நேற்றுமுன்தினம் முதல் பொது வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்ட நிகழ்வினை எதிர்வரும் 25 ஆம் திகதி உத்தியோகபூர்வமாகக் கொண்டாட சுகாதாரத்துறை அமைச்சர் வவுனியாவுக்கு வருகைதரவுள்ளார். (03)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வல்லை நாற்சந்தியில் இருந்து தொண்டமனாறு செல்வச்சந்நிதி வீதியில், வீதியருகே அமைந்த 14 பரப்புக் காணியும், உடுப்பிட்டி வாசிகசாலையில் இருந்து தொண்டமனாறு செல்லும் வீதியில் கெருடாவில் கந்தசாமி கோவிலுக்கருகில் றெட்றோஸ் பாம் (Red Rose Farm) தோட்டத்தின் ஒரு பகுதியும் கிணறுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ.சி.தனபால சிங்கம், சுஜிவா வீடியோ விஷன், தெணியம்பை வீதி, வல்வெட்டித்துறை. (சி-766)


## துயர் பகிர்கின்றோம்

பிறப்பு 1936 . 08 . 04



இறப்பு 2003 . 02 . 16

எமது ஆருயிர் தோழனின் தாயார்

**B.L.லீலாவதி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது இதய அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

நண்பர்கள்
செவிப்புலனற்றோர்.

(301)


நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜய்,ரீமா சென் நடித்த
பகவதி
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
BEST OF THE BEST
10.04.2003 முதல் Jurassic Park-3
(சி-731)

ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 9.30 இற்கும்
(சி-7732)

நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த (உயர்தரம்) 2003
வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka
Institute of Informatics Studies
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
Elephant house
Necto
அனுசரணையில்
ஆசிரியர் குழாம்
வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்
காலம்:- 11.04.2003
நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.


## இன்றைய நாள் இனிய நாள்

**07-04-2003 - திங்கட்கிழமை**

மேடம் :- புதிய ஸ்தானம், தொழில் சிறப்பு, அதிகார விருத்தி, கோப மிகுதி.

இடபம் :- ஏமாற்றப்படுதல், வியாதி, அவமானம், மனக் கவலை, நிலைப்பிரிவு.

மிதுனம் :- பிரயாணத்தால் நன்மை, குடும்ப மகிழ்ச்சி, தேக மெலிவு.

கர்க்கடகம் :- கோபமிகுதி, தேக மெலிவு, மனப் பயம், வாக்குக் கலகம், மனக் கவலை.

சிங்கம் :- சரீர சுகம், வெளியூர் பயணம், பொருட் சேதம், சிநேகிதரால் கவலை.

கன்னி :- தொழில் சிறப்பு, பேரும் புகழும் கிடைத்தல், ஆரோக்கியம், பணவரவு.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

துலாம் :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, ரோக பயம், காரிய விக்கினம், தனதானிய செலவு.

விருச்சிகம் :- குடும்ப மனஸ்தாபம், புத்தித் திறமை, காரிய வெற்றி, வாகன லாபம்.

தனு :- சரீர சுககுறைவு, பிரயாணக் கஷ்டம், தனித்த நிலை, நேத்திரயோகம், தன லாபம்.

மகரம் :- அதிகார விருத்தி, பெண்களால் நன்மை, சிநேக நன்மை, சத்துரு வெற்றி.

கும்பம் :- உறவினரால் கவலை, காரியத் தடை, தார புத்திர விரோதம், வீண் மனஸ்தாபம்.

மீனம் :- பல வகையான பொருட்பேறு, குடும்ப சுகம், பண வரவு, புத்திர சுகம்.

# அமைதித் தேடலின் சாட்சியாக திருமலையில் கலைவிழா

## கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை அறிவிப்பு



நாளை தலைநகரென நாம் நம்பியிருக்கும் திருகோணமலையில், எமது கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை ஆரம்பமாகும் இசை, நடன, நாடகவிழா - ஈழத்தமிழ் கலைஞர்களின் இன்னொரு பாய்ச்சலாகும். எமது கலைகளின் வேர்களையும், விழுதுகளையும் ஒரேயரங்கில் காணும் வாய்ப்பையும், சிங்களக் கலைஞர்களின் பாரம்பரியத்தையும், நவீனத்தையும் அதேயரங்கில் பார்க்கும் சந்தர்ப்பத்தையும் இந்த விழா ஏற்படுத்திக் கொடுக்கும்.

நாடெங்குமிருந்தும் நானூற்றெண்பது கலைஞர்கள் ஒன்றிணையும் இந்தக் கலைவிழா - ஒரு திரிவேணி சங்கமமாகும். தமிழகத்திலிருந்துவரும் கலைஞர்களினதும், எமது சகோதர சிங்களக் கலைஞர்களினதும் இணைவும், எம் தாயகக் கலைஞர்களின் ஒன்றுகூடலும் ஒன்றாகி, இந்தவிழா சமாதானத்திற்கான காலத்தில் உலகத்திற்குச் சொல்லாத சேதி ஒன்றை உரத்துச்சொல்லும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தால், திருமலையில் நடாத்தப்படவிருக்கும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல்-ப' இன் இசை, நடன, நாடக விழா பற்றி - கலை பண்பாட்டுக்கழக கப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அறிவித்துள்ளார்.

நாளை ஆரம்பமாகி - 9,10,11,12 ஆம் திகதிகளில், திருமலை - உவர்மலை விவேகானந்தாக் கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவிருக்கும் இப்பெருவிழா பற்றிய செய்திக் குறிப்பில் புதுவை இரத்தினதுரை மேலும் தெரிவித்திருப்பதாவது -

எமது விடுதலை அமைப்பின் உலகளாவிய மானுட நேசிப்பையும், எல்லா இனங்களையும் அவர்களின் வாழ்வின் சகல வடிவங்களோடும் நாம் எடுத்தணைக்கும் பாங்கையும், நாம் நெருப்பாக வளர்க்கும் விடுதலை விகர்சிப்பையும் இந்த விழா எடுத்துக்காட்டும். இதுவரை எம்மீது திட்டமிட்டு உருமறைப்புச் செய்யப் பூசிய பயங்கரவாத வர்ணத்தை இல்லாதொழிக்கும் எமது தேசியத் தலைவரின் உண்மையான, அமைதிக்கான தேடலின் சாட்சியாக இந்த விழா அமைகிறது. அவரது பணிப்பில்தான் இந்தக் கலைவிழா கால்கோள் கொண்டது.

கலைகள் யாவும் மானுடத்தின் பாடல். மானுடம் வதைவுறும்போதும், மகிழ்வுறும்போதும் நெஞ்சிலிருந்து அப்பாடல் எழுந்து பரவும். உலகெங்கும் உள்ள இனங்களைக் கடந்தும், மொழிகளைக் கடந்தும், மதங்களைக் கடந்தும், நாடுகளைக் கடந்தும், நிறங்களைக் கடந்தும் இந்த மானுடப் பாடல் வியாபகம் கொண்டு, எல்லோருக்குமாக, மனிதத்திற்குரியதாக இந்தக் கலைக்குரல் பொதுமை கொண்டிலங்கும். நாளை திருகோணமலையிலிருந்து கேட்கப்போகும் இந்தப் பாடலும், கூத்தும், இசையும், அசைவும் தமிழினத்தின் வலியை உணர்த்துவதாகவும், அவர்களின் வலிமையை உணர்த்துவதாகவும் இருக்கும். அதேவேளையில் எல்லா இனங்களுக்கிடையிலான இணைப்பையும் இது பேணிப் போஷித்துக் கொள்ளும். கலை பண்பாட்டுக் கழகத்தின் இந்த முன்னெடுப்புச் சரியான காலத்தில், சரியான வழித்தடத்தில் எடுக்கும் ஒரு சரியான காரியமாக நாளை விதந்துரைக்கப்படும். எல்லாக் கலைஞர்களும் இணைந்து எல்லோருக்கும் பொதுவான ஒரு நேர் கோட்டில் சங்கமித்துக்கொள்கிறோம். பங்கேற்கும் சகல கலைஞர்களையும் மனதில் பூ மலர்த்திக் கொண்டு தான் பாராட்டுவதாக அந்த அறிக்கையில் புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார்.

## முல்லேரியா மருத்துவமனையிலிருந்து தலைமறைவான 'சார்ஸ்' நோயாளி

### கண்டுபிடிக்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது 'சார்ஸ்' நோயாளி வைத்தியசாலையிலிருந்து தலைமறைவாகிவிட்டார் எனத் தெரியவந்திருக்கிறது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

நேற்று முன்தினம் அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த பிலிப்பைன்ஸ் நாட்டு விமானப் பணிப்பெண் ஒருவருக்கு, ஆட்கொல்லி நோயான 'சார்ஸ்' நிமோனியா தாக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, மேற்படி நோயாளி முல்லேரியாவிலுள்ள தொற்று நோய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். ஆனால், இவர் அங்கு நானகு மணி நேரமே தங்கியிருந்ததாகவும், பின்னர் தலைமறைவாகி விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சைக்கு வரவில்லை எனத் தெரியவந்ததையடுத்து, தப்பிச்சென்ற நோயாளியைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை அதிகாரிகளுக்குத் தெரியாமல், நோயாளி எவ்வாறு தலைமறைவாகினார் என்று விளக்கமளிக்குமாறு சுகாதார அமைச்சர்- முல்லேரியா வைத்தியசாலைப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

இதேவேளை - கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த கப்பலில் இருந்த ஜப்பானியர் ஒருவருக்கும் இந்நோய் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டபோதும் தாம் நாடு திரும்புவதாகக் கூறி அங்கிருந்து வெளியேறியதாகத் தெரியவருகிறது.

தென்கிழக்காசியாவில் 'சார்ஸ்' உயிர்க்கொல்லி நோயால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரமான தீர்வு; சிங்கப்பூர் அமைச்சர் நம்பிக்கை!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் மூலம், விரைவில் நிரந்தரத் தீர்வு எட்டப்படும் என்று சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயக்குமார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள சிங்கப்பூர் அமைச்சர் ஜெயக்குமார் - வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, டிரோன் பெர்னாண்டோ தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து, சிங்கப்பூர் அமைச்சருக்கு விரிவாக எடுத்துக் கூறியிருந்தார். சமாதான முயற்சிகளுக்குச் சிங்கப்பூர் தனது முழு ஆதரவையும் வழங்கும் என்று சிங்கப்பூர் அமைச்சர் ஜெயக்குமார் - வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவிடம் உறுதியளித்தார்.

## அமைதி முயற்சியில் பங்களிப்பதா? ரணிலுடன் கதிர்காமர் பேச்சு!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை - ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சமாதானப் பேச்சுக்களில், பொது ஜன ஐக்கிய முன்னணியின் பங்களிப்பு எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்பது பற்றி இப்பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுக்களை இருதரப்பு இணக்கப்பாட்டுடன் எவ்வாறு கொண்டு செல்வது என்பது பற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

## பொலிஸாரிடமிருந்து சந்தேகநபரை பலவந்தமாக மீட்டுச்சென்ற எம்.பி.!

(கொழும்பு)

சீதுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை - ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் துப்பாக்கியைக் காட்டிப் பொலிஸாரை மிரட்டிவிட்டு மீட்டுச்சென்றார்.

கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஒலித பிறேமதரணி என்பவரே துப்பாக்கியைக் காட்டி சந்தேகநபரை மீட்டுச் சென்றவராவார்.

இச்சம்பவம் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, இது தொடர்பாக முழுமையான விசாரணைகளை நடத்தி, அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவைப் பணித்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஐக்கியதேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

இதையடுத்து, இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்துக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஒலித பிறேமதரணியை - மலிக் சமரவிக்கிரம கேட்டுள்ளார்.

## பாலாவை லண்டனில் சந்திக்க முஸ்லிம் எம்.பிக்கள் முயற்சி

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு தனியான பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே இச்சந்திப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும், இந்த முயற்சிகள் தொடர்பாக அன்ரன் பாலசிங்கத்தின் தரப்பிலிருந்து எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை எனத்தெரியவருகிறது.



கரவெட்டி சிறிஅம்பாள் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் 17 ஆம் ஆண்டு விழாவில் வடமராட்சி அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் வதனா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## படையினரால் காணாமற்போனோர் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய நாளை ஆவணத் தயாரிப்பு!

யாழ். மாவட்டத்தில் அரச படையினரால் கைதாகிக் காணாமற்போன இளைஞர், யுவதிகள் சார்பில் - உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வதற்கான ஆவணத் தயாரிப்பு நாளை ஆரம்பமாகி, தொடர்ந்து மூன்று நாட்களுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டுகால இராணுவ நடவடிக்கையின்போது, யாழ். மாவட்டத்தில் 618 பேர் காணாமற்போயுள்ளனர். இவ்வாறு காணாமற்போனோர் சார்பாக - முதற்கட்டமாக 100 பேருக்கான வழக்கு, ஆவணத் தயாரிப்பு விசாரணை - யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த ஆவணத் தயாரிப்பு விசாரணைக்காக இலங்கையின் பிரபல மனித உரிமைக்கான சட்டவல்லுநர் சந்திரபால குமாரகேயின் தலைமையில் 6 பேர்கொண்ட சட்ட வல்லுநர்கள் குழு வருகைதரவுள்ளது.

இவர்களுடன் காணாமற்போனோரின் பெற்றோர், குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பின் தலைவர் சாக்கிய நாணயக்காராவும், செயலாளர் சாந்த டீ பத்திரனவும், மனித உரிமைக்கான அமைப்பின் செயலாளர் கந்தசாமியும் வருகை தரவுள்ளனர்.

## சுவீடன் நிதியுதவி

போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீள் நிர்மாணம் செய்வதற்காகச் சுவீடன் அரசாங்கம் 3083 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான நிதியுதவியாக இது அமையும் என்று சுவீடன் அறிவித்துள்ளது. இந்த நிதியுதவி தொடர்பாக - இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் இன்று ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

நிதியமைச்சின் அலுவலகத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமைதி முயற்சிகள் தொடர்பாக ரணில் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு விளக்கம்!

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறும் நடவடிக்கையை - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

சமாதான முயற்சிகளில், எதிர்க்கடசிகளின் ஆதரவையும் பெற்றுக் கொள்ளும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு கட்டமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இனிவரும் காலங்களில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சமாதான முயற்சிகளின் நிலவரங்கள் தொடர்பாக அவ்வப்போது விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் - சமாதான முயற்சிகள் தொடர்பாக விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசாங்கத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஆறு பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகள் ஏற்பாடு!

தென்மராட்சிப் பிரதேசத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவி வரும் ஆறு பாடசாலைகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவுஸ்திரேலியாவிலுள்ள தென்மராட்சி அபிவிருத்தி நிறுவன சங்கத்தினால், தென்மராட்சி நலச் சேவை சங்கம் ஊடாகக் குடிநீர் வசதிகள் வழங்கப்படவுள்ளன.

அல்லாரை அ.த.க பாடசாலை, மந்துவில் றோ.க.த பாடசாலை, கைதடி - நாவற்குழி அ.த.க பாடசாலை, முத்துகுமாரசுவாமி மகா வித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிற்கே குடிதண்ணீர் விநியோகிக்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கிணறுகள் காணப்படும் பாடசாலைகளில்- கிணற்றைத் துப்புரவுசெய்து, இறைத்து நீர்ப்பம்பி மூலம் மாணவர்களிற்கு குடிநீர் விநியோகிக்கப்படும். கிணறுகள் இல்லாத பாடசாலைகளில் குழாய்க் கிணறுகள் அமைத்துப் பைப் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளன.

(34)

## சீருடை விநியோகம்

வலி.மேற்குப் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராமசேவர் பிரிவுகளிலுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடைத் துணி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

## குருபூசை விழா

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 22 ஆவது ஆண்டு குருபூஜை ஆராதனை விழா நாளை மறுநாள் குருமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

### உலக உணவுத் திட்ட ஏற்பாட்டில்

# பாடசாலை மாணவர்களுக்கு இலவச போஷாக்குத் திட்டம்

(கொழும்பு)

உலக உணவுத் திட்டம் வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கான போஷாக்குத் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வட-கிழக்குப் பிரதேசப் பாடசாலை மாணவர்களின் நலன்கருதியே இந்தப் போஷாக்குத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மே மாதம் முதல் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, கல்குடா ஆகிய கல்வி வலயங்களில் முதற்கட்டமாகப் போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் :ஜெ.இனுஜா
முகவரி: 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எட்டாவது அகவையில்

பெயர் : ட.றூ.ற.ஏற்றியன்
முகவரி: ஏழாலை வடக்கு, ஏழாலை.



எட்டாவது அகவையில்



பெயர் : மு.சர்மிளா
முகவரி: "ராணி பவனம்", இளவாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


# அன்னை தெரேசா முக்திப்பேறு பட்டமளிப்பு ஒக்ரோபரில்!

வத்திக்கான் புனித இராயப்பர் பேராலயச் சதுக்கத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அன்னை தெரேசாவுக்கு முக்திப் பேறு பட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்த விழாவுக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் லட்சக் கணக்கானவர்கள் வந்து கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வைபவத்துக்கான சகல ஆயத்தங்களையும், ஒழுங்கு களையும் வத்திக்கான் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. பேராலயச் சதுக்கத்துக்குச் செல்வதற்கான நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையாகிக் கொண்டிருப்பதாகவும், இச்சீட்டுக்களைப்பெற இணையத்தளத்தினூடாகத் தொடர்புகொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

# ஆழியவளை உப தபாலகம் விரைவில் இயங்க ஏற்பாடு

(வடமராட்சி)

கடந்தகால யுத்த நடவடிக்கையினால் மூன்று வருடங்களாக இயங்காதிருந்த ஆழியவளை உப தபால் நிலையம் விரைவில் இயங்கவுள்ளது. இதற்கான நடவடிக்கை தபால் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இரண்டாயிரமாம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையினால், இப்பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து, தபால் நிலையம் சுண்டிக்குளத்தில் இயங்கி வந்தது.

ஆழியவளைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து, இப்பகுதியிலுள்ள மக்கள் உப தபால் நிலையத்தினை மீள இயக்குமாறு கோரிக்கை விடுத்து வருவதையடுத்து, மீள இயக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(23)

# வலிகாமம் கல்வி வலய உடற்பயிற்சிப் போட்டி

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளிற்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி இன்று காலை 8.30 மணிக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் - வலிகாமம் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக - வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜீனா இருதயநாதன் கலந்து கொள்ளவுள்ளார், இதில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகள் யாழ்.மாவட்ட மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொள்ளும் என வலிகாமம் கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

(118)

# கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக முதியோர் சங்கங்களுக்கு ஏற்பாடு!

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசசெயலர் பிரிவுகளிலுமுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக முதியோர் சங்கங்களை அமைக்க சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முதியோர்களுக்குச் சேவைகளை வழங்கவும், அவர்களின் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கவும் - ஏனைய மாகாணங்க ளில் உள்ளதைப்போல, வடக்கு- கிழக்கு மாகாணங்களிலும் முதியோர் சங்கங்களை ஸ்தாபிக்கும்படி சமூக சேவைகள் அமைச்சு பணித்துள்ளது.

இதையடுத்து பிரதேசசெயலக சமூகசேவை உத்தியோகஸ்தர்கள்- முதியோர் சங்கங்களை ஸ்தாபிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (15)

# சமுர்த்தி திட்டத்தினால் செல்வந்தர்களுக்கு நன்மை

## உலக வங்கி கண்டனம்

இலங்கையில், அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தித் திட்டம் வறிய மக்களைச் சென்றடையவில்லை என்று உலக வங்கி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வறுமை ஒழிப்புத் திட்டமான சமுர்த்தித் திட்டம் இலங்கையில் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்று உலகவங்கியின் சிரேஷ்ட பொருளாதார நிபுணரான டி.எஸ். அத்துருபாலே தெரிவித்தார்.

சமுர்த்தித் திட்டத்தில் தற்போது பயன்படுவோரில் 10 வீதமானனோர் செல்வந்தர்களாகவே உள்ளனர். வறுமை ஒழிப்பின் மூலம் பொருளாதாரத்தைப் பலப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியைத் தழுவியுள்ளதாகவும் உலகவங்கி தெரிவித்துள்ளது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஸ்கூட்டரும் துவிச்சக்கரவண்டியும் எதிரெதிரே மோதிக்கொண்டதில், படுகாயமடைந்த இருவர் சிகிச்சைக்கான யாழ். போதனா வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி விபத்தில், துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்தவரான கூளாவடி- ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஜெசுதாஸ் ஜெயகாந் (வயது 19) என்பவரும், ஸ்கூட்டரிலே பிரயாணம் செய்த சங்கானையைச் சேர்ந்த நாகலிங்கம் இராமநாதன் (வயது 45) என்வருமே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சு)

### சாரணர் தலைவர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கத்தின் சிறுவர் தலைவர் மற்றும் அணித் தலைவர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிகள் சங்கானை சைவப் பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என மாவட்டச் சாரணர் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### கூரையிலிருந்து விழுந்தவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வீட்டுவேலை செய்யக் கூரையின் மேல் ஏறியவர், தவறி வீழ்ந்ததில், இடதுகை முறிவடைந்தநிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புத்தூர் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் - இரத்தினம் ராசா ( வயது 25) என்பவரே சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு)

### வர்த்தக பாட செயலமர்வு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புக்களில்- வர்த்தக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான செயலமர்வு - எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (34)

### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றப் பொதுக்கூட்டம் - எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகப் பழைய மாணவர் மன்றத்தின் இணைச்செயலாளர் வ.செல்வராசன் தெரிவித்துள்ளார்.

(23)

### வளம்பேணும் சங்கத்திற்கு வாகனம் கொள்வனவு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு வளம் பேணல் சங்கத்திற்கு மேலும் ஒரு கன்ரர் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வளம் பேணல் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்டுவரும் மணலினைக் குறைந்த ஏற்றுக் கூலியுடன் வழங்குவதற்காக, 5 இலட்சம் ரூபா செலவில் இந்த வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே எட்டு இலட்சம் ரூபா செலவில் முதலுமொரு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (23)

### பொங்கல் விழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா நாளை மறுநாள் செவ்வாய் கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6.30 மணிவரை நடைபெறவுள்ளது.

# அழிப்பின் ஆழங்கள்




"மணியம் உதென்ன பொதியோடே?" என்று வயலில் நின்ற துரையர் கேட்டபோது, வரம்பில் வந்து கொண்டிருந்த மணியம் "வருகிற ஞாயிறு முதலாளி சிவலிங்கத்தாரின் அறுபதாண்டுக் கல்யாணம். அதற்கு அவர் அச்சடிப்பித்த அழைப்பிதழ்கள் கொண்டு போகிறேன்" என்றார். "உந்தமனிசனின் போத்திப் பிள்ளை ஆனையிறவுத் தாக்குதலில் நேற்று வீரமரணமாம். அவளாலே விதவைத் தாய் வேறு தனியாக வன்னியில்! சிவலிங்கத்தாருக்கு மெல்லத் தெரியப்படுத்து! பாவம்" என்று கசிந்தார் துரையர். "அட அநியாயமே!" என்றபடி ஓட்டமும் நடையுமாக வரம்பில் விரைந்தார் மணியம். மாலையில் அங்கு திரும்பவந்த மணியம், "நீங்கள் சொன்னசெய்தியைச் சிவலிங்கத்திடம் மெல்லச் சொன்னபோது, 'ஐயோ' என்றதிர்ந்துவிட்டு, நான் ஒழுங்குசெய்த பிரமுகர்கள் கேள்விப்பட்டால், விழா நடக்காதென்று வராமல் விட்டு, என் அறுபதாம் கல்யாணம் பிசுபிசுக்கப் போகிறதே! மணிவிழாமலர், சொக்கட்டான் பந்தல், மேளம், இசைக்குழு, பந்திபோசனச்சாமான்கள் என்று ஒரு இலட்சத்தை நான் செலவிட்டது வீண்போய்விடுமோ? அமைச்சர்கள், அரச அதிபர், தொழிலதிபர்கள் சிறப்பிக்க வேண்டிய என் கடைசி விழாவைக் குழப்பி விடுவாளோ குறுக்காலே போன குட்டி?" என்று ஆவேசப்பட்ட சிவலிங்கம், பற்கள் நெறுநெறுக்க, "மணியம்! இந்தக் கதை என் வீட்டுக்காரி முதற்கொண்டு யாருக்கும் தெரியக்கூடாது. கதை பரவினால் பலர் மாட்டுப்பட வேண்டிவரும்" என்று என்னையும் மிரட்டும் தோரணையில் குரைத்தார்". "சரி" என்று விட்டு மறுகணமே திரும்பிவிட்டேன்" என்று குமுறினார் மணியம். "ஐயோ மணியம், இந்த மகளின் கணவன் திடீரென்று அன்று இறந்தபோது, விழுந்துபுரண்டழுத மனிதன், ஒரு வீரச்சாச் செய்திகேட்டால், முன்பெல்லாம் 'ஐயோ! ஆர் பெற்ற பிள்ளையோ?' என்று துடிக்கும் மனிதன் இந்தச் சிவலிங்கம். அந்த மனிதனுமா இன்று இதயத்தை இழந்து இப்படி மிருகமாகிவிட்டார்? ஐயோ பாவிகளே!" என்று பெருமூச்சு விட்டபடி மணியம் பின்தொடர வீட்டுக்கு அவசரமாகப் புறப்பட்டார் ஊரடங்கு நேரம் நெருங்குவதை உணர்ந்தவராக.

## பஞ்சாட்சரம் கதைகள்


## 5

# A-9 ஐ நீளும் நினைவுகள்

ஈழ யுத்தம் தொடங்கிய நாட்களில்
ஈரப்பெரிய குளமே வடக்கதின்
பாதையில் எல்லையாகத் திகழ்ந்தது...
பச்சை உடைகள் பரவி நிறைந்தன
கேள்வி கேட்பவர் அற்றதால்... கத்திகள்
கீறும்; துவக்குக் கிழிக்கும்; பயணங்கள்
வானலோகத்தைச் சேரும்! நினைக்க அவ்
வதைகள் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்திடும்.

வரலாற்றின் பழம்பக்கம் புரட்டினேன்
வலிகள் பட்டுத் தமிழன் துடிக்கையில்
அரக்கத் தனங்கள் மிரட்டி அடக்கின
அன்ற ஏ-9... எரித்த லொறிகளின்...;
இறக்கப்படாமல் பஸ்ஸோ டெரிந்தோரின்...;
இறுதிச் சாம்பலைப் பூசிக் கிடந்தது!
சிறிய தடையான ஆனை இறவதன்
சிறைக் குருதியைத் தீர்த்தமாய்ப் பெற்றது!

ஈழ யுத்தம் சிறு சிறு மோதலால்
எரியத் தொடங்கிய அந்தநாள்! ஏ-9
பாதையில் அன்றே பாய்ந்தன மோதல்கள்.
பலத்தினால் யாழை மீட்கப் புறப்பட்ட
"ஆரியபெருமா" எனும் தளபதி
இந்த வீதியிற் கண்ணியிற் சிக்கினார்.
ஈழ விடுதலை இயக்கத்தின் கண்ணியில்
இரயிலுடன் பல வீரர்கள் மாண்டனர்.




-ஜெயங்கொண்டான்

# கிழக்கும் மேற்கும்

## சிறுத்தொண்டர் நாயனார் - அமிஸ் எட் அமிலஸ்

ஒவ்வொரு நாளும் சிவனடி யார்களை -
ஒருநாளுக்கு ஒருசிவனடி யவரையாகிலும்
அன்புடன் அழைத்து உணவு படைத்து
அடியவர் உண்டபின் தாமுண்ணும் விரதத்தைச்
சிரமேற் கொண்டவர் பரஞ்சோதி யாவார்!
சிவனடி யவர்களை உயர்ந்தவ ராகவும்
சிவனடி யாரின்முன் தாம்சிறியவ ராகவும்
தம்மைத் தாழ்த்திக் கொண்டவர் ஒழுகவே
அனைவரும் அவரைச் "சிறுத்தொண்டா" என்றனர்!
சிவனவன் அருளினால் "சீராளதேவர்" எனும்
தவமகன் உதித்தான் சித்தம் மகிழ்ந்திட!
சிவனடி யவர்க்குத் தினம்தினம் செய்யும்
சிவத்தொண்டை - மெய்யன்பைக் - கண்டு மகிழவும்
அகிலத் தவர்க்கிதை உண(ய)ர்த்தி வைக்கவும்
திருவுள்ளம் கொண்ட சிவபெரு மானொரு
சிவனடி யவராகத் திருவேடங் கொண்டு
திருச்செங் காட்டம் குடியினில் உள்ள
சிறுத்தொண்டருடைய வீட்டின் வாசலில்
சென்று நின்றவர் தொண்டரை அழைத்தார்!
"சிவனடி யார்களைத் தேடிக் கொண்டவர்
வெளியே போனா" ரென்று பதில்தந்த நங்கை




"உள்ளே வந்து ஆசனத் தமருங்கள்" எனச்
சிவனடியாரை அழைத்திட - அடியவர் மறுத்தார்!
மறுத்ததைக் கண்ட நங்கையார் விரைந்து
"எனது நாயகர் தினம்தொறும் தவறாது
சிவனடி யவர்க்குத் திருவமுது அளிப்பவர்!
காலை முதல் அடியவர் ஒருவரை யாகிலும்
காணாமை யினாலே சிவனடியாரை(த்) தேடிப்
போயுள்ளார் - உங்களைக் கண்டதும் மகிழ்வார்!
ஆதலின் தாங்கள் வந்துள்ளே அமருங்கள்!" என
அழைத்தார் பணிவுடன் - அதற்கும் மறுத்திட்ட
சிவனடியார் "கணபதிச் சரத்தினில் உள்ள
திருவாத்தி மரத்தின் கீழ் இருப்பதாய் அவரிடம்
தெரிவியுங்கள்" என்று தெரிவித்துச் சென்றார்!
சிவனடி யவர்களை எங்கெல்லாம் தேடியும்
கிடையாதுளம் நொந்து இல்லம் திரும்பிய
சிறுத் தொண்டரிடத்தில் சிவனடியார் பற்றி
நங்கையார் கூறிட விரைந்தவர் சென்று
சிவனடி யவரின் இருப்பிடம் கண்டு
தயவுடன் தாமேற்ற விரத்தை விளக்கித்
தனது விரதத்துக்கு இன்று நேர்ந்துள்ள
தடையினை - இடரினை - விளக்கி நின்றார்! (தொடரும்)



முருகு

# பாலையும் சோலையும்



இவரது நெறியாள்கையில் 'பாதுகாப் பட்டாபிடேகம்' இசை நாடகத்தில் நடித்த அனுபவமும் எனக்குண்டு. அது பற்றிப் பின்பு கூறுவேன்.

எங்களின் சங்கீத ஆசிரியர் இசை மணி பொன்.முத்துக்குமாரனும், சித்திர ஆசிரியர் சண்முகநாதனும், விவசாயப் போதனாசிரியர் நடேசனும், உடற்பயிற்சி ஆசிரியர் கார்த்திகேசுவும் ஒவ்வொருவகையில் குறிப்பிடப்பட வேண்டியவர்களே. இவர்களுள் இசை மணி பொன். முத்துக்குமாரன் பற்றியும் பின்பு குறிப்பிடுவேன்.

இவ்வளவு பேரையும் குறித்துவிட்டு ஒருவர் பற்றி நான் இதுவரை குறிப்பிடாதது அர்த்தத்தோடுதான். அவர் என் நெஞ்சக் கருவறையிலே தெய்வமாக வீற்றிருக்கிறார் என்றால் அது மிகையுமல்ல. பண்டிதமணி சி.க. அவர்களால் 'கற்கண்டுப் பண்டிதர்' எனக் கனிவோடு அழைக்கப்பட்ட பொன்.கிருஷ்ணபிள்ளையே அவர். ஆசிரியர் கலாசாலையில் நான் பயின்ற காலத்தில், ஈழகேசரியில் அடிக்கடி எனது சிறு கதைகள், நாடகங்கள், கட்டுரைகள் வெளியாகிய வண்ணம் இருந்தன. பண்டிதர் பொன்.கிருஷ்ணன் அவர்களின் இலக்கியக் கட்டுரைகளும், நூல் திறனாய்வுகளும் அவ்வப்போது வெளியானதும் உண்டு. பண்டிதர் அவர்கள் விரிவுரை மண்டபங்களிலும், வெளியிலும் என்னை மனந்திறந்து பாராட்டிய சந்தர்ப்பங்கள் மிகப்பல. 'டேய் சொக்கா. உன்னைப்போல ஆட்கள் யூனிவேசிற்றியிலை படிக்கப் போயிருக்கவேணும். இந்தப் பயிற்சி உனக்கு வீண்" என்று அவர் புகழ்ந்த, சில ஆண்டுகளின் பின் தமிழ் டிப்ளோமா பயிற்சிக்கு நான் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றபோது நிதர்சன உண்மையாயிற்று. கள்ளம் கபடமற்ற, குழந்தையுள்ளம் வாய்ந்த அவரின் ஆசியோடும், பரிந்துரையோடும் அவரின் மைத்துனர் 'யாழ்ப்பாணன்' (ஆசிரியர் சிவக்கொழுந்து) அவர்களாலே எனது முதல் நூல் "வீரத்தாய்" அச்சிட்டு வெளியானதை நான் மறக்கமுடியுமா? அந்நூலுக்கு அருமையான அணிந்துரையையும் அவர் வழங்கியுள்ளார்.

இத்தனைப் பெருந்தகையாளரின் நினைவினைப் போற்றி, நான் எழுதி வெளியிட்ட 'இலக்கியக் கருவூலம்' என்ற நூலினை அவருக்கே காணிக்கையாக்கினேன்.

பொன்கிருஷ்ண பிள்ளைபசும் பொன்னனைய பண்பாளர்
என்னா சிரியபிரான் என்னுளத்தே - எந்நாளும்
நீக்கமற நிற்கின்ற நேயத்தால் அன்னவர்க்கென்
ஆக்கமிது காணிக்கை யாம்.

நாடகத்தில் எனக்கிருந்த ஈடுபாடு மேலும் வளரவும், மெருகு பெறவும் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பல வாய்ப்புக்கள் கிடைத்தன. 1951 இல் சங்கிலியனின் தியாக வரலாற்றினை நானே நாடகமாக எழுதி (இது முதலில் "தீர்ப்பு" என்ற பெயரிலே ஈழகேசரியிலே சிறுகதையாகவும் வெளிவந்தது. எனது கணிப்புச் சரியானதென்றால் - சங்கிலியன் பெயரால் வந்த நவீன நாடகங்கள் யாவிற்கும் முன்னோடி எனது 'சங்கிலியன்' நாடகமே என்று மிக அடக்கமாகக் கூறிக் கொள்கின்றேன்) நானே சங்கிலியனாக நடித்தேன். நண்பர்கள் மு.இராசரத்தினம் - அப்பாபிள்ளையாகவும், தம்பிராசா - பரநிருபனாகவும் நடித்தார்கள். கலாசாலைத் தமிழ் விழாவிலே இந்நாடகம் அரங்கேற்றப்பட்டது. எங்கள் சிரேஷ்ட மாணவரான பொன்னையா (காலமாகிவிட்டார்) ஷேக்ஸ்பியர் நாடகத்தில் யூலியஸ் சீசராக நடித்த நாடகமும் அரங்கேறியது. விழாவின் சார்பில் நடைபெற்ற இந்நாடகப்போட்டியில், நடிப்பில் எனக்கு முதற் பரிசும், பொன்னையாவிற்கு இரண்டாம் பரிசும் கிடைத்தன. விழாவின் முதன்மை விருந்தினராய் வருகைபுரிந்த தந்தை செல்வா (எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்கள்)வின் கையால் பணப்பரிசும், பாராட்டும் பெற்ற பேற்றினை நினைந்து மகிழ்கின்றேன்.

மற்றொரு வைபவத்தில் 'இரு நண்பர்கள்' என்ற நாடகமும் என்னால் எழுதி, நெறியாளப்பட்டு, அரங்கேறிப் பாராட்டும் பெற்றது. 1952 ஆம் ஆண்டுத் தமிழ் விழாவிலே பாதுகாப் பட்டாபிடேகம் நாடகம் முன்பே நான் குறித்ததுபோல விரிவுரையாளர் வேதநாயகம் அவர்களின் நெறியாள்கையில் அரங்கேறியது. இசை - நாடகமாகிய இந்நாடகத்தில், நயினாதீவுக் காமாட்சிசுந்தரம் (காலமாகி விட்டார்.) இராமராகவும், நான் இலக்குமணராகவும் பாடி நடித்தோம். திருக்கோயில் வன்னியசிங்கம் (காலமாகி விட்டார்) சீதையாகப் பாத்திரமேற்று நடித்தார். உணர்ச்சிமயமான நிலையில்தான் பெருங்குரல் எடுத்துப் பாடிய பொழுது என் குரல் கட்டிவிட்டது. ஒருவாறு சமாளித்துப் பார்வையாளர் கண்டனத்துக்குத் தப்பினேன்.

எனது நடிப்பை (சங்கிலியன் நடிப்பை) மிகுதியும் இரசித்துப் பலருக்குக்கூறிப் பாராட்டித் திரிந்தவர் என இசை ஆசிரியரான இசைமணி பொன்.முத்துக்குமாரன் அவர்கள். எங்கள் பயிற்சி இறுதியிலே இடம்பெற்ற கல்விச் சுற்றுலாவில், நாங்கள் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த வேளையில், மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் இரவு தங்கினோம். அங்கு அவ்வாசிரியர் கலாசாலை மாணவரால் - எமக்கு இரவு விருந்து வழங்கப்பட்டது. அவ்விருந்தின்போது, பொன்.முத்துக்குமாரன் அவர்கள் - சங்கிலியன் நாடகத்தில் தான் பேசிய வசனங்களை மட்டக்களப்பு ஆசிரிய மாணவர்கள் முன்பு பேசிக் காட்டுமாறு பணித்தார். அவர் பணிப்பினை நிறைவு செய்தபோது, மட்டக்களப்பு மாணவர்கள் தங்கள் பாராட்டுக்களைக் கரகோஷம் செய்து வெளிப்படுத்தினர்.

## கலாநிதி.சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

வேதநாயகம் அவர்கள் தமது விரிவுரை ஒன்றின் போது, ஷேக்ஸ்பியரின் **Rape of Lugrace** என்ற நெடும் பாக்கதையினைச் சுவைபட எடுத்துரைத்தார். அந்தக் கதையினைக் கருவாகக்கொண்டு 'புனிதவதி' என்ற நாடகத்தை எழுதினேன். அது ஈழகேசரி வார இதழ்களில் தொடர்ந்து வெளியாயிற்று. நான், அமரர் வரதராசப்பெருமாள், இன்னும் சிலர் (பெயர்கள் ஞாபகமில்லை) சேர்ந்து நடித்த 'கவிஞன் பரிசும்' (யாழ்ப்பாடிக் கதை) அவ்வாறே வெளியாயிற்று. (தொடரும்)

# இலக்கியச் சோலை

# அம்மா அழாதே!

குறுநாவல்

ரவி அருணாசலம்

பகுதி 3

காலையில் சூரியன் எழுந்து நல்லா வெளிச்சம் வந்து, பாதையைக் கண்விரியப் பார்த்துப் போகலாம். நாகத்தைக் கண்டால் தலை தெறிக்க ஓடலாம். ஆனல், பிலாப் பழுத்தல் குத்தேக்கை, பிலா மரத்திலை இருந்து என்ரை கழுத்தாங்குத்தியிலை விழுந்து, சடாரெனக் கண்ணுக்குள்ளையே குத்தாது இருக்கிப் பிடிச்ச, என்ரை கண்ணுக்குள்ளை குத்தாது எண்டு என்ன நிச்சயம்? நான் என்ன சிவபெருமானா? அட, அம்மாளைக்கூட என்னைக் காப்பாத்த ஏலாது. நினைக்கவே ஏலாமல் கிடக்கு. ஏன்தான் நாகத்தைக் காட்டிக் குடுத்தனோ?

கிராமிட்டி வைரவர் கோயிலுக்குப்போய் ஆலம்பழுத்தல் குத்தினேன். அம்மாள் கோயிலுக்குப்போய் அரசம் பழுத்தல் குத்தினேன். அப்பிடிப் பொய் செய்யக்கூடாது. ஒரு அரசம் பழுத்தல் குத்த, சின்னராசம்மாக்கா விடுவாவே! ஒரு உக்குணி ஆட்டை அந்த அரச மரத்தை நம்பித்தானே வைச்சிருக்கிறா. ஒரு பழுத்தல் பிறருக்குக் கிடையாது. பட்டு, எப்பிடியோ சிண்ணக் கொக்கத்தடி கொண்டு திரிந்து குழைகள் வெட்டி விடுவான். தாசத்தன் பெரிய கொக்கத்தடியால் ஆலங்குழையே வெட்டுவார். எனக்குக் குத்தூசிதான். அது குத்தும் பழுத்தல்கள் தான். பழுத்தல்கள் பத்தாத போது, நான் புழுதி பறக்கப் புல்லுச் செதுக்கினேன். மத்தி யான நேரத்திலை அம்மா வெட்டிக் கழித்த மரக்கறிகள், தோலுகள், புழுக் குத்தின கத்திரிக்காய்கள், புழிஞ்ச தேங்காய்ப்பூ, போட்டு, அரிசி கழுவின தண்ணி, கஞ்சி எல்லாவற்றையும் கொண்டு வந்து போட்டுவிடுவேன். மீன் கழிவுகள் நாய்க்கும், பூனைக்கும் - மரக்கறிக் கழிவுகள் ஆட்டுக்கும்.

அக்கா இதிலை பயங்கரக்கள்ளி. ஒண்டும் செய்யாது பேசாமல் இருக்கும். மூதேசி! றேடியோவோடை சோர்ந்து, தான் பீ.சுசீலா எண்ட நினைப்பிலை பாட்டுப்பாடும். அல்லாட்டில், நிமதியக்காவோடை போய் நிண்டு கனநேரத்துக்குக் கதைக்கும். என்னைக் கண்ட உடனே கதையை நிப்பாட்டும். தான் ஒண்டும் உழைக்காமல், மற்றாக்களின்ரை உழைப்பிலை வயிறு வளர்க்கிறது எவ்வளவு கேவலம்! அம்மா அப்பிடி எனக்கொருக்காலும் சொல்லித்தரேல்லை. தன்ரை வயிறெண்டில்லை. ஆனல், ஏ கிடாய்க்குட்டி அக்காவுக்குத்தானே?

அக்காவின்ரை கிடாய்க்குட்டியைப் பாக்கப் பாவமா இருக்கும். என்ன பாவம் செய்து அக்காவுக்குக் குட்டியா வந்து சேர்ந்துதோ? இரண்டு குட்டிகளுக்குக் சேர்த்து நான் தேடின எல்லாத்தையும் குடுப்பன். தின்னுறதைப் பாக்கவே ஒரு ஆசை. தின்ட பிறகு, தாயிட்டைப்போய் இடிச்சு, இடிச்சுப் பால் குடிக்கும். தாயும் அப்பாவியா முகத்தை வைச்சிருக்கும். அக்காவின் குட்டி சரியான 'தன் புறம்பெட்டி' அக்காவோடை மாத்திரம்தான் ஆசையா விளையாடும். என்னோடை ஏனோ தானோவென்று விளையாடும். என்ரை குட்டி அப்பிடி வஞ்சகம் செய்யிரேல்லை. அக்காவோடையும் ஆசையா விளையாடும். விளையாடுறது ஒரு மூண்டு நாலு மாசம்தான். பிறகு அம்மா வித்துப்போடுவா.

செல்லத்துரையண்ணைக்கு ஒரு கிடாய்க்குட்டி கட்டாயம். பிறகு, தம்பாகலட்டி கடந்து பூமணிக்கு ஒரு கிடாய்க்குட்டி. ஒரு குட்டியைப் பதினைஞ்சு ரூபாய்க்குக் குடுத்தா, அந்தக் காசிலை அம்மா எனக்கு ஒரு ரீசேர்ட் வாங்கித்தந்தா. நான் முதல் போட்ட ரீசேர்ட் அதுதான். வசந்தா அத்தாச்சியும் கண்ணனுக்கு அந்த ரீசேர்ட்டைத் தரச்சொல்லி ஆசைப்பட்டவா. கடும் நீலக் கலர். இரண்டு கரையிலும் ரோஸ் நிறக் கோடு. இப்பிடி ரீசேர்ட்தான் படங்களிலை ரவிச்சந்திரன் போட்டு குண்டியை நெளித்து ஆடுவார். ஜெய்சங்கர், முத்துராமன், ஏ.வி.எம்.ராஜன் ஆக்களும் போடுவினம். சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி இப்பிடி ரீசேர்ட் போடுறதை நான் காணேல்லை.

கிடாய்க்குட்டி வித்த காசிலை அக்காவுக்கு ஒண்டும் வாங்கிக்குடுக்கேல்லை. ஒண்டும் செய்யாதவாவுக்கு ஏன் வாங்கிக்குடுப்பான்? அப்பிடியும் சொல்லேலாது. அம்மா அடுத்தவா. இப்பிடி வாற காசுகளைச் சேத்துத்தானே அக்காவுக்கு மோதிரம், காப்பு, சங்கிலி, தோடு எண்டு வாங்கிறவா. பொம்பிளைப்பிள்ளைகள் புண்ணியம் செய்ததுகள். வாற மாமாமார், அத்தைமார், அத்தாச்சிமார் எல்லாரும் எதுவெண்டாலும், அக்காவுக்குத்தான் கொண்டு வருவினம். 'நீ ஆம்பிளைப்பிள்ளைதானே?' எண்டு ஒரு வசனம் தான் எனக்குக் கொண்டு வருவினம். நான் ஒரு கரையிலை நிண்டுகொண்டு எல்லாத்தையும் ஒரு மாதிரிப் பாப்பன். அழுகை வருமாப்போலையும் இருக்கும். வருகு! பத்தைவழிய டிப்போய் காரைப் பழம், சூரைப்பழம், புல்லாந்திப்பழம், பீநாறிப்பழமும் ஆய்வன். கடிக்கும் பாம்புகள் கடிக்கட்டும். சோட் போடாத மேலை பத்தை கீறின இரத்தக்கசியல் கிடக்கும். முதுகிலைதான் அநேகமா இருக்கும். அம்மா அதைக் காணுவா. 'என்ன ராசா, இரத்தம்?' அம்மா முதுகைத் தடவுவா. காயம் போகும், நோவும் போகும்.

அம்மா நெஞ்சைத் தடவுற மாதிரி ஒருநாள் ஒரு காரியம் செய்தா. எனக்கு ஒரு மோதிரம் வாங்கித்தந்தா. அம்மாவே அதைப் போட்டும் விட்டா. போட்டுவிட்ட இடம் பயமான இடம். பயமான நேரம். குரும்பகலட்டி வேதக்காறச் சுடலைக்குக் கிட்ட. வேதக்காறச் சுடலை பெரிய பயம்தாற இடமில்லை. வேதக்காறப் பேய்கள் வலிமை குறைந்து, பயங்கரமா தாக்கும் தன்மை குறைந்து வீரியம் குறைந்தவை. சாரைப் பாம்பு மாதிரி. ஆனால், இடம்தான் கிளியன் என்கிற பயங்கரக் கள்ளன் திரிகிற இடம். குரும்பகலட்டி உருத்திராபதியண்ணையின்ரை மனிசிகூட வேலியாலை எட்டிச் சொல்லுவா 'உதாலை இப்ப கிளியன் போனவன். கவனமாப்



போங்கோ' எங்கடை வீட்டு முற்றத்தில் நின்ற 'வூல்சிலி' மிசினிலை 'மக்னிற்'றறைக் கூடக் களவெடுத்தவன். வேறை வீட்டிலை களவெடுத்த 'மக் னிற்றறை' பிறகு எங்களிட்டை வித்தவன். அவன் களவெடுக்கவர, எங்கன்ரை ரொமி சும்மாவிடாது. அவன் ரொமியின்ரை வாயையும் மந்திரிச்சு கட்டிப்போட்டுத்தான் களவெடுத்தவன். ரொமியும் பிறகு இரண்டு மூண்டு நாளா சாப்பிட முடியாமல் கிடந்தது.

(தொடரும்)

---

## நூல் அகம்

சமகாலக் கண்ணோட்டத்தை யதார்த்தமாகச் சித்திரித்து, மக்களுக்குப் படைக்கப்படும் ஆக்கங்களே நவீன இலக்கிய உலகில் நீடித்து நிலைத்து நிற்கக் கூடியவை. இந்தவகையில் தற்காலப் போர்ச்சூழலை மையமாகக்கொண்டு - தீபா குமரேஷ் எழுதிய 'புரிதல்' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. கதாசிரியரின் அனுபவப் பதிவுகளிலிருந்து படைக்கப் பட்டிருக்கும் கதைகள் ஒவ்வொன்றும் அழகானவை, ஆழமானவை. இந்தத் தொகுதியில் 12 தமிழ்ச் சிறுகதைகளும், ஒரு ஆங்கிலச் சிறுகதையும் வெளிவந்துள்ளது.




எல்லாக் கதைகளும் சிறப்பானவை. இதனால், தொகுதியிலுள்ள ஒருசில சிறுகதைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம்.

"பூப்போட்டு.... பூப்போட்டு...." என்ற சிறுகதை - ஒரு தம்பதிகள் தமது திருமண நாளன்று துயிலுமில்லம் சென்று மாவீரர்களின் கல்லறைகளுக்குப் பூப்போட்டு அஞ்சலி செலுத்துவது வழக்கம். துயிலுமில்லத்தில் குறைவாக இருந்த கல்லறைகளுக்குப் பூப்போட்டு வந்த தம்பதியினரும், மகளும் கல்லறைகள் பெருகப் பெருகப் பூப்போடுவதில் களைத்து விடுகிறார்கள். இதன்போது, இவர்களின் குழந்தை "அம்மா, அடுத்தமுறை வரும்போது தம்பி, தங்கச்சியோடு வருவமேயம்மா. அப்பதான் நிறையப பூப் பிடுங்கிக்கொண்டு எல்லா மாமாக்களுக்கும் போடலாம்" என்று அந்தக்கதை சொல்கிறது.

"அன்பு" என்ற சிறுகதையில் போராட்டச் சூழ்நிலையிலுள்ள, அவர்களது 'அன்பு' என்ற பெயர்கொண்ட நாய் எவ்வளவு பங்களிப்புச் செய்கிறது என்பதை விபரித்துக் காட்டுகிறது. படையினர் வருவதற்கு முன்னே - படையினர் வருகிறார்கள் என்பதை அங்குமிங்கும் ஓடிச்சென்று, குரைத்து முன்னெச்சரிக்கை செய்து போராட்டத்தில் பங்களிப்புச் செய்கிறது. அந்த நாய் இறந்தபோது, வீட்டின் பின்பக்கமாகப் புதைக்கச்சொன்ன அம்மம்மாவுக்கு, அந்தச் சிறுவன் "புதைக்கவேண்டும் என்று சொல்லாதீர்கள். முன்பக்கமாய் விதைக்க வேண்டும்" என்று சொல்கிறான்.

'புரிதல்' என்ற சிறுகதையில்- ஒரு போராளிக்கு உதவப்போய் சிறையில் வாடும் ஒரு பெண்மணியின் அவஸ்தைகள் பற்றியும், அவள் மானபங்கப்படுத்தியது பற்றியும் சித்திரித்துக் காட்டுகிறது. அதனால், தனது காதலன் டேமியனிடம் சொல்ல முற்பட்டபோது 'நடந்து முடிந்த எதற்கும் நீ காரணமில்லை. உன்னில ஒரு தவறுமில்லை' என அவளைத் தேற்றிக்கொள்கிறான். 'புரிதல்' மொத்தத்தில் தரமான ஒரு சிறுகதைத் தொகுதியாகும்.

மகரம்

---

## சந்திப்பும் நினைவுகளும்

மறுமலர்ச்சிக் காலப் படைப்பாளிகளில் ஒருவர் அ.ந. கந்தசாமி.

அவர் தனது பெரும்பாலான காலத்தை நோயிலே கழிக்க வேண்டியிருந்தது. ஒவ்வொருநாளும் பல குளிசைகளைப் போட்டுத் தனது உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருந்தார்.

அவரை நான் கொழும்பு - கொம்பனித் தெருவிலுள்ள 'ஐலண்ட் கபேயில்' சந்திக்க நேர்ந்தது. அவர் அநேகமாகப் படுக்கையில் இருந்தவாறு என்னோடு தற்காலத் தமிழ் இலக்கியங்களின் போக்குகள், வளர்ச்சிகள் பற்றிப் பல தடவைகள் கருத்துக்களைப் பரிமாறினார்.

அப்பொழுது என்னாலும், இரா.சிவச்சந்திரன் போன்ற ஒரு குழுவின் முயற்சியில் 'தமிழமுது' என்ற இலக்கியச் சஞ்சிகை 1968 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொழும்பில் வெளியிடப்பட்டது. அந்த இதழ் அ.ந.கந்தசாமி அவர்களின் அட்டைப் படத்தைத் தாங்கியதாக வெளிவந்தது. அந்த இதழில் அவரின் கடைசிக்கால நிலைபற்றி ஆசிரிய தலையங்கமும், அவரின் கவிதையொன்றையும் பிரசுரித்திருந்தோம்.

தினகரன் ஆசிரியராக இருந்த பேராசிரியர் கைலாசபதி- தினகரன் தினசரி இதழில் தொடர்கதைகளை வெளியிட்டு பல சாதனைகளைப் புரிந்தவர். முதலில் இளங்கீரனின் 'நீதியே நீ கேள்' என்ற நாவலைப் பிரசுரித்து, தினகரன் விற்பனையில் கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்தியவர். இளங்கீரனின் நாவலுக்குப் பிறகு - அ.ந.கந்தசாமியின் நாவல் ஒன்றும் வெளியிடப்பட்டது. இளங்கீரனின் நாவல் போன்று, தினகரன் வளர்ச்சிக்கு அ.ந.கந்தசாமியின் நாவலும் உத்வேகத்தைக் கொடுத்தது.

தினகரனில் எழுதிய நாவல், 'எதிர்பாராதது' என்ற படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது நாவலை எழுத நேர்ந்ததாக அவர் குறிப்பிட்டார். இந்த நாவலுக்குப் பின்பு கொழும்பில் ஓடும் களனி ஆற்றுக்க ருகில் வாழும் மக்களின் பின்புலத்தை மையாகக் கொண்டு நாவல் ஒன்று எழுதப்பட இருப்பதாகக் குறிப்பிட் டார்.

அந்த உன்னதமான படைப்பிடையே, அவர் எம்மை விட்டுப்பிரிந்தது பெரிய இழப்பாகும். அவரின் இறுதிச்சடங்கில் பல படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் பங்குபற்றினர். அதன் பின்பு படைப்பாளிகள் சிலரால், அவர் எழுதிய ஆக்கங்களை நூலாகக்கொண்டு வருவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்த அமைப்பு உருவாக்கப்பட்டு இன்றுவரை அ.ந.கவின் எந்த ஆக்கமாவது நூலுருப்பெறவில்லை.

மணிசேகரன்.

---

## நூல் அகம்

பொதுச்சாதாரண பரீட்சை- பொது அறிவு, பொதுவிவேகம், ஆகியவற்றை ஒரேநேரத்தில் பரீட்சிப்பதற்கான ஒரு பரீட்சையாகும். இலங்கை மாணவர்களின் ஆளுமை விருத்தியடைவதற்கு, அவர்களின் பொது அறிவு விருத்தி செய்யப்படவேண்டும். இதன் காரணமாகவே புதிய பாடத்திட்டத்தில் பொதுச்சாதாரண பரீட்சை புகுத்தப்பட்டது. பல்கலைக்கழகம் புகும் மாணவர்கள் ஒரு கணிசமான பொது அறிவைக் கொண்டவர்களாக விளங்கவேண்டும் என்பதற்காக, பொதுச்சாதாரண பரீட்சை கொண்டுவரப்பட்டது.




பொதுச்சாதாரண பரீட்சைக்கு ஆங்கிலத்தில் பல நூல்கள் இருந்தபோதும், தமிழில் போதுமான நூல்கள் இல்லை. இக்குறைபாட்டினைப் போக்கும் வகையில், இரட்டையர்கள் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிதரும் செயலாகும். P.உமாசங்கர், P.கமலதாசன் ஆகிய இருவரும் பொதுச்சாதாரண பரீட்சையை மையமாகக்கொண்டு, காலத்துக்குக் காலம் பல நூல்களை வெளியிட்டுள்ளனர். இரண்டாயிரம் ஆண்டிலிருந்து எழுதப்புறப்பட்டவர்கள்- கடந்த நான்கு ஆண்டுகளில் ஏழு பதிப்புக்களை வெளியிட்டுள்ளனர். ஏழாவது பதிப்பு ஜனவரி 2003 இல் வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளது. இத்தகைய மின்னல் வேகத்தில் இடம்பெற்றுவரும் நூல் வெளியீட்டால், மாணவர்கள் பல புதுப்புது விடயங்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உமாசங்கரும், கமலதாசனும் இணைந்து வெளியிடும் பொதுச்சாதாரண பரீட்சைக்கான வழிகாட்டி நூல் - பொது அறிவையும், பொது விவேகத்தையும் மாணவர்கள் இலகுவில் கற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதை எவரும் மறுக்கவோ அல்லது மறக்கவோ முடியாது. மாணவர்கள் கற்கும் ஆவலைத் தூண்டுவதற்காகப் பொதுச்சாதாரண பரீட்சைக்கான இவர்களது நூல், சிறிய தலைப்புக்களின் கீழ் தகவல்களைத் தந்துள்ளது. குறிப்பாகப் பொருளாதாரம், அரசியல், விளையாட்டு, விண்வெளி போன்ற பல தலைப்புக்களின் கீழ் பொதுச்சாதாரண பரீட்சைக்குரிய தகவல்களைத் தருகின்றது. இத்தகைய அமைப்பானது கற்கின்ற மாணவர்களது ஆவலைத்தூண்டி, மேலும் கற்கும் விருப்பத்தை உண்டாக்கிவிடுகின்றது.

க.தேவராஜா
தலைவர்,
வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.
-திருக்குறள்

# நமது நோக்கு

## சீரழிவைக் களைவதற்கு...!

யாழ்.குடாநாட்டில் - பாலியல் ரீதியான வன்முறைகளையும், விபசாரம் போன்ற சமூகச் சீர்கேடுகளையும் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் தீவிர கவனம் செலுத்தப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாகவே பெண்கள் மீதான வன்முறைகளும், பாலியல் சீர்கேடுகளும் - கடந்த சில ஆண்டுகளாக இருந்ததைப்போல அதிகரிக்கும் போக்கு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல சமூக அமைப்புக்களும், பொதுமக்களும் விடுதலைப் புலிகளின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வந்தனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைய வருடங்களாக முறையான சமூகப்பாதுகாப்புக்குரிய கட்டமைப்பு உருவாகாது போனதும் - சமூகச் சீரழிவுகளை ஊக்குவிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

பல சந்தர்ப்பங்களில், 'சில சமூகச் சீரழிவுகள் கண்டும் காணாமலும் விடப்பட்டு - அவற்றினூடாக, தமிழ் மக்களுடைய கட்டுக்கோப்புமிக்க வாழ்வாதாரத்தையே திட்டமிட்டு அசைத்திடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

விபசாரமும், பாலியல் இச்சைகளைத் தூண்டக்கூடிய திரைப்படங்களும் இந்த வகையில் - யாழ். குடாநாட்டில் வேரூன்றுவதற்கு சில சக்திகளால் திட்டமிட்டவாறு இடமளிக்கப்பட்டது.

ஆனால் - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர்- இத்தகைய செயற்பாடுகள் அருகத் தொடங்கின. விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சில நடவடிக்கைகளால் இச்சமூகச் சீரழிவுகள் தடுத்து நிறுத்தப்பட்டமையானது, மக்களிடையே நிம்மதியையும், அமைதியையும் ஏற்படுத்தியது. மக்களது மனப்பூர்வமான பாராட்டும், ஆதரவும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்குக் கிடைத்தது.

ஆனால் - அண்மைய நாட்களாக இந்த சமூகச் சீரழிவுகள் மீண்டும் துளிர்விடும் போக்கில் காணப்பட்டதை - பொதுமக்கள் பலரும் விடுதலைப் புலிகளின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வந்ததைத் தொடர்ந்து -

அவற்றினைத் தடுத்து நிறுத்துவதான, கட்டுப்படுத்துவதான தீவிர முயற்சிகளில் - சமூக அமைப்புகளினூடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும், அவற்றினை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

தமிழ்ச் சமுதாயத்தையே அசைத்து - எமது பாரம்பரியமான சமூகக் கட்டமைப்பைச் சிதைவுக்குள்ளாக்கி, எமது இளம் சமுதாயத்தை திசை திருப்பும் - இந்தச் சமூகச் சீரழிவுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்பும் மிக அவசியமானதாகும்.

சமூகச் சீரழிவுகள் எங்கெங்கு நடைபெற்றாலும் அவற்றை அறிந்து - சம்பந்தப்பட்டவர்களிடம் அவை பற்றிய தகவல்களைச் சேர்ப்பிப்பதன் மூலமாகவும்,

அயலிலும், இன்னும் பிற இடங்களிலும், ஒவ்வொரு பொதுமகனும் தமக்குரிய சமூகப்பொறுப்புணர்வை உணர்ந்து - தாமாகவே கண்காணிப்பை மேற்கொண்டு சமூகச் சீரழிவுக்கான காரணிகள் பற்றி விழிப்பாக இருப்பதனாலும் --

- சமூகத்தை கட்டிக்காப்பதற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கமுடியும்.

பாலியல் வன்முறைகள், சீரழிவுகள் மட்டுமல்ல - சமூகத்தைக் குட்டிச்சுவராக்கும் கசிப்பு உற்பத்தி, போதைப்பொருள் பாவனை போன்றவற்றோடும்,

குடாநாட்டு இளைய சமுதாயத்தை ஒரு சில காலங்களாகவே பாதித்துவந்த குழுச்சண்டைகள், அடாவடித்தனங்கள் என்பவை பற்றியும், தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மழைவிட்டும் தூவானம் நிற்கவில்லை என்பது போல, ஆங்காங்கே இன்னும் தலைகாட்டும் இந்தச் சமூகக் களைகளை வேரோடு அகற்றுவதற்கு மக்களும் துணைசெய்யக்கூடியவர்களாக மாறுவதன் மூலமே - அமைதியும், நிம்மதியும், கட்டுக்கோப்பும், ஒழுக்கமும் மிக்க ஆரோக்கியமான சமுதாயத்தைப் பேணமுடியும்.

# வெளிச்சமின்றிக் கடலில் மீன்பிடிக்க வேண்டாம்!

## வடமராட்சியில் படையினர் அறிவுறுத்தல்

வடமராட்சி கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களை வெளிச்சமின்றி தொழிலில் ஈடுபட வேண்டாம் என்று படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கடற்தொழிலில் ஈடுபடும் வேளைகளில், கடற்படையினருடைய ட்ரோலர்கள் மோதுவதால் ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் வகையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கரையோரப்பகுதிகளிலுள்ள இராணுவ காவலரண்கள் அமைந்துள்ள பகுதிகளில், காவல் நிலைகளில் இந்த அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

கடற்தொழிலில் ஈடுபடும் வள்ளங்கள் வெளிச்சங்களுடன் கடற்தொழிலில் ஈடுபட வேண்டும் என அறிவிப்பு பலகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(23)

# தொழில்நுட்பக் கல்லூரி மாணவருக்கு பிரித்தானியக் கல்விச் சான்றிதழ்

பிரித்தானியாவின் சிற்றி அன்ட் கில்ஸ் கல்வி நிறுவனத்துடன், அரசாங்கம் கல்வி உடன்பாடு ஒன்றைச் செய்துள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரிகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே இந்த ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், தொழில் நுட்பக் கல்லூரிகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு பிரித்தானிய அங்கீகாரம் பெற்ற சிற்றி அன்ட் கில்ஸ் கல்விச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத் தேடவும், மேற்படிப்புக்களுக்கும் அதிகவாய்ப்பு ஏற்படும் என மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்தார்.

இந்தக் கல்வி ஒப்பந்தத்தில், மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிமும், சிற்றி அன்ட் கில்ஸ் நிர்வாகப் பணிப்பாளர் மைக்கல் நிவோனும் கைச்சாத்திட்டனர்.

# மலையகப் பாடசாலைகளுக்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள்

இந்தியாவில் இருந்து 60 ஆசிரியர்கள் இலங்கைக்கு வரவழைக்கப்படவுள்ளனர்.

இவர்களில் 30 பேர் மத்திய மாகாண தமிழ்ப் பாடசாலைகளுக்கும், ஏனையோர் பதுளை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டப் பாடசாலைகளிலும் நியமிக்கப்படவுள்ளனர் என்று மத்திய மாகாண கல்வி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் கல்விப் பொதுத்தராதர உயர்தர பாடங்களையும், ஆங்கிலப் பாடத்தையும் கற்பிக்க மாத்திரமே நியமிக்கப்படவிருக்கின்றனர்.

இதேவேளை, இவர்கள் இலங்கை ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிப்பார்கள். உள்ளூர் ஆசிரியர்கள் இந்தியாவில் பிரபல பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு பட்டங்களும் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் தருவிக்கப்படுவதினால், இங்குள்ள ஆசிரியர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படமாட்டாதென்றும், இவர்களுக்குரிய சம்பளங்களை இந்திய அரசாங்கமே வழங்கும் என்று அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார்.

# கோயில்கள், பொது அமைப்புகளுக்கு நேற்று காசோலை வழங்கப்பட்டது

174 இந்துக் கோயில்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று மாலை 3 மணிக்கு நல்லூர் ஆலய முன்பாக உள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கோயில்கள், சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வேறு பொது அமைப்புக்களுக்கும் காசோலைகள் வழங்கப்பட்டன

89 லட்சத்து 40 ஆயிரத்து 250 ரூபா நேற்று வழங்கப்பட்டது. காசோலைகளை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வழங்கினார்.

# ஈராக் யுத்தம் தொடர்ந்தால் மின்சாரக் கட்டணம் உயரலாம்

## மின்சாரசபைத் தலைவர் தெரிவிப்பு

ஈராக்கில் ஏற்பட்டுள்ள யுத்தம், இலங்கையில் மின்சார உற்பத்திக்கான செலவீனத்தை அதிகரித்திருப்பதாக மின்சார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நீர் மின்சார உற்பத்திக்கான வாய்ப்புக்கள் குறைந்துள்ளன. நீரேந்துப் பிரதேசங்களில் மழை வீழ்ச்சி குறைந்துள்ளது. இதனால் எரிபொருள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டியுள்ளது.

ஆனால், எரிபொருள் விலை அதிகரிப்பினால் மின்சார உற்பத்திச் செலவு உயர்ந்து வருகின்றது. ஈராக்கில் யுத்தம் தொடர்ந்தால், மின்சாரசபை அதிகளவிலான நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும் என்றும், இதற்கு மாற்று ஏற்பாடாக மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் மின்சாரசபைத் தலைவர் தெரிவித்தார்.

# தேசியக்கொடி, கீதத்தை மாற்றச் சொல்ல எந்த நாட்டவருக்கும் உரிமை இல்லை!

## நோர்வே மீது ஜே.வி.பி. கண்டனம்

நாட்டின் தேசியக்கொடியையோ, தேசிய கீதத்தையோ மாற்ற வேண்டும் எனக்கோரும் உரிமை எந்தவொரு வெளிநாட்டு இராஜதந்திரிக்கும் கிடையாது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அண்மையில் காலி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில், நோர்வே இராஜதந்திரியான பீற்றர் நிக்கல்சன் -

இலங்கையில் சமஷ்டி அரசு ஏற்பட்டால் தேசியக் கொடி, தேசியகீதம் என்பனவற்றை மாற்றியமைக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இதற்கு ஜே.வி.பி கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசியக் கொடியையோ, தேசிய கீதத்தையோ மாற்றுமாறு சொல்வதற்கு எந்த வெளிநாட்டு இராஜதந்திரிக்கும் உரிமை கிடையாது. இதைச் சொல்வதற்கு நோர்வேயர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

இனப்பிரச்சினைத் தீர்வு என்று கூறி, மேற்கு நாட்டவர்கள் இலங்கையின் உள்விவாகரங்களில் அதிகமாகத் தலையிடுகின்றனர் என்றும் ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

# விமானப்படை அதிகாரிகளுக்கு அமெரிக்காவில் மேலதிக பயிற்சி

## வழங்குமாறு அமெரிக்கத் தளபதியிடம் கோரிக்கை

இலங்கை விமானப் படையின் அதிகாரிகளுக்கு, அமெரிக்க விமானப்படை மேலதிகப் பயிற்சிகளை வழங்க முன்வரவேண்டும் என்று, விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா கேட்டுள்ளார்.

நான்கு நாள் விஜயமாகக் கொழும்பு வந்திருந்த அமெரிக்க விமானப் படையின் பசுபிக் பிராந்தியத் தளபதியான ஜெனரல் வில்லியம் கேபெசக்யை விமானப் படைத்தளபதி நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

ஏற்கனவே - அமெரிக்காவில் இலங்கை விமானப்படை அதிகாரிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்ற போதும், அதனை மேலும் - அதிகரிக்க வேண்டும் என்றும், பயணிகள் விமானங்களைப் பராமரிப்பதற்கான உதவியும் அமெரிக்காவிடம் கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# பூகோளமயமாக்கலும் யாழ்ப்பாணத்து இளையோரும்



தற்காலத்தில் யாழ்.இளையோரின் வாழ்க்கைப் பாதையில் பிறழ்வுகளை நாம் அவதானிக்கலாம். இப்பிறழ்வுகளிற்கு உரிமை கோர வேண்டிய கடப்பாடு பூகோள மயமாக்கலின் காரணகர்த்தாக்களிற்கும் உண்டு என்றால், யாரும் அதை மறுத்து உரைக்க மாட்டார்கள் என்றே கருதத் தோன்றுகின்றது. பூகோளமயமாக்கல் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதாகச் சிலர் கருதுகின்றனர். சிலர் உற்பத்திச் செயற்பாட்டின் ஓர் அங்கம்தான் பூகோளமயமாக்கல் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால், இப்பதத்தைத் திட்டமிட்ட அமைப்புரீதியான ஓர் தீமையாகவே கருதவேண்டியுள்ளது.

**பூகோளமயமாதல்**

நாடுகள் தமக்கிடையே கொள்கைகளை வரையறுத்து, தமது தனித்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காது, உலகனைத்தையும் ஓர் கிராமமாக மாற்றக்கூடிய ஓர் செயல்முறையே பூகோளமயமாதல் எனக்கொள்ளலாம். பூகோளமயமாககல்- தோற்றுவிக்கும் நுகர்வுக்கலாசாரம் எமது சமூகத்தினை நிலைப்படுத்தும் பாரம்பரிய குடும்ப, சமூக, விழுமியச் சீரழிவிற்கு இட்டுச்செல்கின்றது. 1948 ஆம் ஆண்டு உருகுவே நாட்டில் கைசசாத்திடப்பட்ட 'கற்' ஒப்பந்தமே உலக வர்த்தக அமைப்பில் பூகோளமயமாதலுக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

ஒழுக்கக் கட்டுப்பாடுகள் இல்லாத **(Moral free)**, தங்கு தடைகளற்ற சர்வதேச வர்த்தகத்திற்கான சூழல் உருவாக்கப்பட்டது. ஒவ்வோர் நாட்டினதும் தனித்துவங்களை அழித்து, பல்தேசிய நிறுவனங்களின் வர்த்தக அமைப்பினை 'கற்' ஒப்பந்தம் நியாயப்படுத்துகின்றது. இப்பன்னாட்டு நிறுவனங்களினால் 70 வீதமான உலகவர்த்தகம் கட்டுப்படுத்தப்படுகின்றது. இந்நிறுவனங்கள் மக்களின் நலனில் அக்கறை கொள்பவையல்ல. மாறாக, இலாபத்திலேயே முழு நோக்காகக்கொண்டு செயற்படுகின்றன. இந்நிறுவனங்களின் இலாபத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனேயே உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் **(IMF)** போன்றன குறைவிருத்தி நாடுகளின் உட்கட்டுமானப் பணிகளில் ஈடுபடுகின்றன. இப்பன்னாட்டு நிறுவனங்களின் இலாப நட்டக் கணக்குச் சில குறைவிருத்தி நாடுகளின் வரவுசெலவுத் திட்டத்தைவிட பன்மடங்கு உயர்ந்ததாகக் காணப்படுகிறது.

பலர் பூகோளமயமாக்கலை ஆதரிக்கின்றார்கள். பொருட்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அரசாங்கத்தின் எதுவித இடையூறுமின்றி தமது செயற்பாடுகளை இப்பல்தேசியக் கம்பனிகள் மேற்கொள்கின்றன. அரசாங்கமும் தாராளமயமாக் கலையும், தனியார் மயமாக்கலையும் ஊக்குவிக்கின்றது. இந்நிலையில், இலாபநோக்கம் அடிப்படையாகக் காணப்படும். சேவை நோக்கம் முற்றாகக் கைவிடப்பட்டநிலை தோன்றும். இந்நிலையில், இயல்பாகவே சமூகமும், சூழலும் சீரழிய வாய்ப்பு இருக்கின்றது.

பல குறைவிருத்தி நாடுகள் தாம், பெற்றுக்கொண்ட கடன்களைத் திருப்பிச்செலுத்த முடியாத பட்சத்தில். அதிகளவான தனியார் மயமாக்கலை ஊக்குவிக்கின்றார்கள். இதன் விளைவு இயந்திரமயமாக்கல், வேலைவாய்ப்பு இன்மை, சூழல் மாசடைதல், வறுமை என்பனவாகும். பூகோளமயமாக்கல் காரணமாக, உலகச் சனத்தொகையில் 15 வீதமான மக்கள் 79 வீதமான உலக வளங்களின் உரிமையாளர்களாகத் திகழ, மிகுதி 85% வீதமான மக்கள் 21 வீதமான உலக வளங்களைப் பயன்படுத்துகின்றனர்.

**இளையோரின் மனநிலை**

இளமைப்பருவம் இனிமையான ஓர் பருவமாகும். இளையோர் தமது வாழ்வில் புதிய புதிய விடயங்களை அறிந்து, அவற்றை அனுபவிக்க முற்படும் காலமாகும். இக்காலத்தில் எதையும் அங்கீகரிக்கவும், அனுபவிக்கவும் வேண்டும் என்ற அவா மேலோங்கி இருக்கும். இந்நிலையின் பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு அவர்களிற்குப் போதுமான நேரம் கிடைப்பதில்லை. தமது உடற்கட்டமைப்பிலும், வெளியுலகிலும் பல புதுமைகள் நிறைந்திருப்பதை உணர்வார்கள். இப்புதுமைகளின முழுமையை அடைய- இயல்பாகவே அவர்கள் நாட்டம் கொள்கின்றார்கள். உளவியலாளர்கள் கூறுவார்கள்- மனிதன் உணர்வுகளால் கட்டப்பட்ட ஓர் மலை போன்றவன்.

பெரும்பான்மையானவர்கள் தமது இளமைப்பருவத்தில், தமது வாழ்வின் பொறுப்பை உணர்ந்து கொள்வதில்லை. உலகம் எப்பக்கம் சாய்கின்றதோ அப்பக்கமே அவர்களும் சாயும் தன்மை கொண்டவர்கள். உலகம் சடப்பொருள் வாதத்திற்குள் **(Materialism)** அமிழ்த்தப்படுகிறது என்றால், இளையோரும் சுயவறிவின்றி அச்சேற்றுக்குள்ளே இழுக்கப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இளையோர்- பலராலும் போற்றப்பட்டகாலம் ஒன்று

பி.தே.யூட்தாஸ்

உண்டு. கல்வியிலும், விளையாட்டிலும் கொடிகட்டிப் பறந்த பொன்னான காலம் உண்டு. இடையிட்டு நிகழ்ந்தபோரும், அதன் தீவிர விளைவுகளும் இளையோரின் உடல், உளநிலையை முற்றாகப் பாதித்துவிட்டது என்றால் மிகையாகாது. ஏன் இன்று இளையோர் என அழைக்கப்படுபவர்கள் போர் பெற்றெடுத்த பிள்ளைகள் **(War Children)** ஆவர் என்றும் சொல்லப்படுவர்.

அது ஒருபுறமிருக்க- இப்பூகோளமயமாக்கல் காரணிகள் அதிகமாக யாழ். இளைஞரை ஊடறுக்கின்ற நிலை - நடத்தைப் பிறழ்வுக்கு வழி சமைக்கின்றது எனலாம்.

பெரியோரை மதியாத் தன்மை, எடுக்கின்ற முடிவுகள் வன்முறை சார்ந்ததாக இருத்தல், கல்வியில் பாரிய வீழ்ச்சி, பாலியல் துஷ்பிரயோகங்கள், கொள்கைகள் இவ்வாறு பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். இளம் வயதிலேயே அநேகமான இளைஞர்கள், தமது கல்வியை இடைநிறுத்திவிடுகின்றார்கள். இதனால், சீராகச் சிந்திப்பதற்குப் போதிய கல்வியறிவு இருக்காது. அத்தோடு, வேலையில்லாப் பிரச்சினை மேலோங்கிக் காணப்படும். பொழுதுபோக்கு வசதிகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இந்நிலையில், தொடர்பு சாதனங்களையே பொழுதுபோக்கிற்காகப் பாவிக்கின்றார்கள். ஆனால், தொடர்புசாதனங்கள் அனைத்தும் பூகோளமயமாக்கல் காரணிகளை வாரியிறைத்த வண்ணமாக இருக்கின்றன. எனவே, இளையோர் இக்காரணிகளால் ஈர்க்கப்பட்டுகின்றார்கள்.

வேலையில்லாப் பிரச்சினை காணப்படுவதால், சுயமாகப் போதியளவு பணம் இவர்களிடம் இருக்காது. இருக்கின்ற பணத்தையும் இவ்வாறான பாதிப்புத் தரக்கூடிய பொருட்களைப்பெற்று அனுபவிப்பதில் செலவு செய்கின்றார்கள். உதாரணமாக- மதுபானங்கள், புகைத்தற் பொருட்கள், அலங்காரப்பொருட்கள் போன்றவற்றைக் கூறலாம். கடந்த சில குறிப்பிட்ட காலங்களில் புதினப்பத்திரிகைகளில் தினமும் இளையோர் செய்த செயற்பாடுகள் பிரசுரிக்கப்பட்டதை நாம் அறிவோம். உதாரணமாக பாலியல் பலாத்காரம், கோஷ்டி மோதல், கொள்ளையடித்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் எல்லா இளையோரும் மேற்கொள்ளும் செயற்பாடாக எடுத்துக் கொள்ள முடியாது. மாறாக, ஆங்காங்கே ஒரு சிலர் செய்வது முழுச் சமூகத்தையும் பாதிப்பதாக அமைகின்றது.

பூகோளமயமாக்கல் காரணிகளிலிருந்து - இளையோர் ஓர் நாளிலேயே முழுமையாகத் தம்மை விலத்திக்கொள்ளமுடியும் என்று கருதமுடியாது. மாறாக, இளைய சமூகத்தவர்கள் மத்தியில் இவ்வாறான விழிப்புணர்வு இருத்தல் மிகவும் அவசியமாகும். எதிர்காலச் சமூகத்தின் தூண்களாகத் திகழ இருப்பவர்கள் எமது இனத்தின் பண்பாட்டுத் திரவியங்களை விலை பேசுபவர்களாக இருக்காது- பேணிக்காத்து, தமிழர் பெயர் எத்திக்கும் ஒலிக்க எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். வாழ்க்கை இனிமையானது. வாழ்க்கையை அனுபவிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், பிழையான நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக- வாழ்க்கையை அனுபவிப்பதில் யாதொரு பொருளுமில்லை ✪

# தொழுநோய் / குஷ்டரோகம்

இது **mycobacterium leprae** எனப்படுகின்ற **Bacteria** இனால் உருவாக்கப்படுகின்ற மனிதரில் மிக நீண்டகாலம் நிலைத்து காணப்படுகின்ற தொற்றுநோய். இந்நோய் நரம்புகளை மட்டுமன்றி, தோல், கண், சுவாசத்தொகுதி, தசை, எலும்பு, விதை ஆகிய பகுதிகளையும் பாதிக்



கின்றது. இதனால், ஏற்படுகின்ற பாதிப்புகளின் விளைவாகத் தொழுநோயாளி தமது அன்றாட வேலைகளைச் செய்ய முடியாதநிலை ஏற்படுவதுடன், நோயினது அதிதீவிர நிலையில் - தமது அங்கங்களையும் இழக்க நேரிடுகிறது. அடையாளம் காணப்பட்ட குஷ்டரோகி- சமுதாயரீதியில் தனிமைப்படுத்தப்படுவதனால், உளவியல் ரீதியான தாக்கங்களுக்கும் உள்ளாக வேண்டியநிலை ஏற்படுகின்றது. என்வே, பொதுமக்கள் இந்நோயினை மிக ஆரம்பநிலையிலேயே இனங்கண்டு, தகுந்த வைத்திய சிகிச்சையைப் பெற்றுக்கொள்வார்களானால் இந்நோயின் சகல தாக்கங்களிலிருந்தும் தம்மைப் பூரணமாக விடுவித்துக் கொள்ளமுடியும்.

**தொற்றும் முறை**

இது ஒரு பரம்பரை நோயல்ல. இது மிக அரிதாகவே தொற்றுகின்றது. தொழுநோயாளிகள் சிகிச்சையைப் பெறத்தொடங்கிவிட்டால், அவர்கள்கூட நோயைப் பரப்பமாட்டார்கள். தொழுநோயானது, முக்கியமாக இரண்டு முறைகளில் பரவுகின்றது.

1. சிகிச்சை பெறாத தொழுநோயாளருடன் நீண்டகாலத் தொடர்பு இருப்பதன் மூலமாகவும், அவர் இருமும்போதோ, தும்மும்போதோ வெளியேற்றும் துணிக்கைகளை உட்சுவாசிப்பதன் மூலமாகவும் இந்நோய் ஒருவரிலிருந்து மற்றொருவருக்குத் தொற்றுதல் அடைகின்றது.

2. தொற்றும் தன்மையுள்ள தொழுநோயாளியின் சருமத்திலுள்ள தடங்களில் ஏற்படும் காயம் - இன்னொருவரின் காயத்தில் தொடுகையுற்றால், அவற்றின் மூலமும் பரவலாம்.

90 வீதமானவர்கள் இந்நோய்க்கு இயற்கையான எதிர்ப்புச் சக்தியை இயல்பாகவே கொண்டிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இந்நோய் பிரதானமாக - மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும், அடுத்தாக - ஊர்காவற்துறைப் பிரதேசத்திலும், வேறு பல பகுதிகளிலும் ஆங்காங்கே காணப்படுகின்றது.

**நோயரும்பு காலம்**

**Mycobacterium laprae** இரட்டிப்படையத் தேவையானகாலம் நீண்டதாக, 12-13 நாட்களாகக் காணப்படுவதால், இந்நுண்ணங்கியின் நோயரும்பு காலமும் நீண்டதாக- 6 மாதங்கள் தொடக்கம் 20 வருடங்கள் வரையிலானதாகக் காணப்படுகின்றது.

நோயினது தாக்கம் குறிப்பிட்ட அங்கங்களில் அதிகமாகக் காணப்படும்.

உள்நுழையும் நுண்ணங்கி, தனது வாழ்விடமாக, உடலின் குளிர்மையான பகுதிகளைப் பயன் படுத்துவ

**செ.கஜன்**
**4ஆம் வருட மருத்துவ பீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

தால் - முகம், கை, கால் ஆகியவற்றின் தோலும், அவற்றுக்கு அண்மையாகவுள்ள நரம்புகளும் பாதிப்படைகின்றன. நோயின் ஆரம்பநிலையில், மேற்பரப்புக்குக் கிட்டவுள்ள அங்கங்களும்- பிந்திய நிலையில், தோல் மேற்பரப்பில் இருந்து ஆழமாகவுள்ள அங்கங்களும் பாதிப்படைகின்றன.

**தொழுநோயின் பாதிப்புக்கள்**

❖ கை, கால்களில் விறைப்புத் தன்மை, உணர்ச்சி குறைவடைதல், குறண்டிப் போதல் ஆகியன ஏற்படும். இதனால், கைகளினால்



வேலை செய்வது கடினமாகும்.

❖ உணர்ச்சியற்றுப்போன பாதங்கள், விரல்கள், கைவிரல்கள் என்பவற்றில் காயங்கள் ஏற்பட்டு, அவற்றினால் பாரிய அசெளகரியங்கள் ஏற்படும்.

❖ கண் பாதிக்கப்பட்டுப் பார்வை இழக்கும்நிலை ஏற்படலாம்.

❖ சூடான, குளிரான பொருட்களைத் தொட்டுணர முடியாதநிலை ஏற்படும். இத்தகைய பாதிப்புக்கள் ஏற்பட்ட பின்னர், வைத்திய சிகிச்சை மூலம் இழந்த உடற் பகுதிகளை மீளப்பெற்றுக் கொள்ளமுடியாது. எனவே, குஷ்டரோகத்தினை ஆரம்பத்திலேயே இனங்கண்டு, சிகிச்சை பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானதாகும்.

**தொழுநோயின் அறிகுறிகள்**

1. தோலில் உணர்ச்சியற்ற தடங்கள் தென்படும். இத்தடங்கள்,

❖ வெளிறிய அல்லது சிவந்த அல்லது செப்பு நிறமுடையதாக இருக்கும்.

❖ தோல் மட்டமாகவோ அல்லது தடித்ததாகவோ இருக்கும்.

❖ தடங்களில் எரிவு அல்லது கடி இருக்காது.

❖ தொடுகைக்கு உணர்ச்சியில்லாதநிலை இருக்கும்.

❖ சூடு, தொடுகை என்பவற்றை அறியமுடியாதபடி, உணர்ச்சியின்மை ஏற்படலாம். அத்துடன், வலியையும் உணரமுடியாது.

2. த்டங்களுக்குப் பதிலாகச் செந்நிற அல்லது தோலின் நிறத்தை ஒத்த கட்டிகள் தோன்றலாம்.

3. மினுமினுப்பான தோலுடைய பகுதிகள் உடலில் தோன்றலாம். இவற்றில் உணர்ச்சியில்லாமலும் இருக்கலாம்.

தொடரும்.....

# ஈராக்-போர்க்களம்

# குர்திஷ் படையணி மீது அமெரிக்கா தாக்குதல்!

## பத்துப் பேர் உடல் சிதறிப் பலி



அமெரிக்காவின் போர் விமானமொன்று - அமெரிக்கப் படையுடன் இணைந்து போரிடும் குர்திஷ் படையினரின் வாகன அணி மீது நடாத்திய குறிதவறிய தாக்குதலில், பத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்துமுள்ளனர்.

ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பித்ததன் பின்னர் - அதிகரித்து வரும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் குறிதவறிய தாக்குதல்களில் இச்சம்பவமும் பாரிய இழப்புக்குரியதொன்று என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

குர்திஷ் படையினர் மீதான தாக்குதல் - மக்மூர் என்ற நகருக்கு அண்மையில் நடந்தது.

தரையில் தாக்குதல் நடாத்தும் அமெரிக்கப் படையினர், அறிவித்தபடி விமானங்கள் தாக்குதல்களை நடாத்தியபோதே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

## ஈரானியரின் எலும்புக்கூடுகள் ஈராக் முகாமில் கண்டெடுப்பு!

ஈராக்கில், அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளால் கைப்பற்றப்பட்ட, ஈராக்கிய இராணுவத்தின் கைவிடப்பட்ட படைமுகாமொன்றில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான மனித எலும்புக்கூடுகள் ஈரானியப் படையினருடையதென - அந்நாட்டு இராணுவ ஜெனரல் ஒருவர் தெரிவித்தார்.

அல்-சுபைர் நகருக்கு அருகிலேயே இந்த எலும்புக்கூடுகள் பெருமளவில் காணப்பட்டன.


இது, பல ஆண்டுகளுக்கு முன் நடந்த ஈரான்- ஈராக் யுத்தத்தின் போது கொல்லப்பட்ட ஈரானியரின் சடலங்களின் எச்சங்களே என - ஈரானிய உயர் ராணுவத் தளபதியான பிரிகேடியர் ஜெனரல் மிர்வெய்சல் பக்கீர்சாதே கூறியுள்ளார்.

ஆனால், இச் சடலங்கள் - 1991 இல் நடந்த 'பாலைவனப்புயல்' வளைகுடாப் போரில் உயிரிழந்தவர்களுடையதெனவும் இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

1980 முதல் 88 வரை நடந்த ஈரான் - ஈராக் யுத்தத்தில் ஆயிரக்கணக்கான படையின் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




பக்தாத் விமான நிலையத்தை மீட்டெடுத்த மகிழ்ச்சியில் ஈராக் படையினர்.



பக்தாத் விமான நிலையத்தை மீட்டெடுத்த ஈராக் படையினர் அங்கு அமெரிக்கப் படையினர் விட்டுச்சென்ற பொருட்களுடன்.

# அமெரிக்கப் படைகள், வாகனங்கள் பக்தாத்தை நோக்கிச் செல்கின்றன!

## இதுவரை 2000 யுத்த வாகனங்கள் யூப்பிறற்றீஸ் நதியைக் கடந்தன



(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தைக் கைப்பற்றுவதற்கான தீவிரமான போரில் ஈடுபட்டுவரும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளுக்கு உதவுவதற்கென, மேலதிகமான படையணிகளும், யுத்த வாகணங்களும அங்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

ஈராக்கின் பிரதான நதிகளில் ஒன்றான யூப்பிறற்றீஸ் நதியைக் கடந்து - நேற்றுக்காலைவரை இரண்டாயிரம் படை வாகனங்கள் பக்தாத் நோக்கிச் சென்றிருக்கின்றன.

ஏற்கனவே - பக்தாத்தைச் சூழப் போரிட்டுவரும் - படையினருடன் இவை இணைந்துகொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இதுவரை - இரண்டாயிரம் முதல் மூவாயிரம் வரையான ஈராக்கியப் படைகள் பலியாகியிருப்பதாக பென்ரகன் தகவல் வெளியிட்டபோதும் - இதை அடியோடு மறுத்திருக்கிறார், ஈராக்கியத் தகவற்துறை அமைச்சர் முஹமட் சாயிட் அல்-சகால்.

அமெரிக்கர்களின் பக்தாத் நோக்கிய நகர்வு தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதாகவும், தாம் - வரும் அமெரிக்கர்களின் தலைகளைக் கொய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கட்டாரில் அமைந்துள்ள, ஈராக் மீதான தாக்குதலுக்கான அமெரிக்கக் கட்டளைப்பீடம் - பக்தாத் மீது நடாத்தப்படும் தாக்குதலுக்கான வான்வழியிலான புதிய யுத்த தந்திரோபாயம் பின்பற்றப்படத் தொடங்கிவிட்டதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த சனியன்று இத்தகைய தாக்குதல் வழிமுறை பரீட்சிக்கப்பட்டிருப்பதாகவும் அது தகவல் வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, பக்தாத்திலிருந்து ஈராக்கியப் பொதுமக்கள் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேறி வருகின்றனர்.



போரில் காயமுற்ற அமெரிக்கச் சிப்பாய் ஒருவருக்கு அவசரமாகச் சிகிச்சையளிக்கும் சக படையினர்.

# பஸ்ரா முழுமையாக பிடிக்கப்படவில்லை உண்மையான நிலைவரம் கசிகின்றது!

இன்னமும் போர் தொடர்ந்து கொண்டிருக்கும் பஸ்ரா நகருக்குள் பிரிட்டிஷ் துருப்புக்கள் தமது புதிய படையணிகளையும் யுத்த டாங்கிகளையும் அனுப்பியிருக்கின்றன.

ஏழாவது ஆயுத பிரிகேட் மற்றும் 'பாலைவன எலிகள்' படையணிகளைச் சேர்ந்த ஏழாயிரம் படையினர் பஸ்ராவுக்குள் புதிதாகப் புகுவதற்குத் தயாராகி வருகின்றனர் என பிரிட்டிஷ் படைவட்டாரங்கள் தெரிவித்தன.



இன்னமும் தீ தணியாத பஸ்ரா

பஸ்ரா நகரின் முக்கிய பகுதிகளை தாம் கைப்பற்றிவிட்டதாக பிரிட்டிஷ்-அமெரிக்கக் கூட்டுப்படைகள் அறிவித்தும் - இன்னும் ஆங்காங்கே இந்நகரினுள் மோதல்கள் தொடர்வதை பிரிட்டிஷ் படைகள் ஒத்துக்கொண்டிருக்கின்றன.



பக்தாத்தை விட்டு கைக்குழந்தையுடன் தப்பியோடும் ஈராக்கியத் தாய்.


# ரஷ்ய இராஜதந்திரிகளின் வாகனஅணி மீது தாக்குதல்!

## நேற்றுப் பகல் பக்தாத்தில் நடந்தது

பக்தாத் தெருவில் பயணம் செய்து கொண்டிருந்த ரஷ்ய நாட்டு ராஜதந்திரிகளின் வாகன அணியொன்று நேற்றுப்பகல் தாக்கப்பட்டிருக்கிறது.

ஈராக்கிற்கான ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் ரிரோரென்கோவ் தலைமையிலான குழுவினர்- சிரியா நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே, அந்த வாகனஅணி தாக்கப்பட்டதாக - ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் பேச்சாளர் தெரிவித்தார்

இதில் பலர் காயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் - எவரும் உயிரிழந்தார்களா என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.



ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டின்

இத்தாக்குதல் பற்றி புட்டினுக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் - மொஸ்கோவிலுள்ள அமெரிக்க மற்றும் ஈராக் தூதுவர்கள் அங்குள்ள ரஷ்ய வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டிருப்பதாகவும் புட்டினின் பேச்சாளர் அலெக்ஸி குரோமோப் கூறினார். அண்மையில் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் நடாத்திய

உலகவலம்

விமானத் தாக்குதல்கள், பக்தாத்திலுள்ள ரஷ்யத் தூதரகத்திற்கு அண்மையிலும் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே - இராஜதந்திரிகள் அங்கிருந்து வெளியேற ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பக்தாத் நகர வீதியில் அழிந்துபோய்க் கிடக்கும் யுத்த டாங்கி.


நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

மலேசியாவில் இரண்டு வருடம் பிரித்தானியாவில் ஒரு வருடமும் கல்விகற்று நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்.

- ☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
- ☆ ஆகக்குறைந்த தகைமை G.C.E (O/L)
- ☆ பாடநெறிக்கட்டணத்தை இலகுவாக தவணை முறையில் செலுத்தலாம்.
- ☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.
Far Overseas Educational Consultants
444C 2/1,Galle Road,Ratmalana
யாழ்.தொடர்புகளுக்கு 30 1/1 சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059 (வ.கி.மாகாண இணைப்பாளர்).
072-859041
E.Mail:- ecolenviros@ dynaweb.lk (சி-765)




நேற்று இடம்பெற்ற திருமலை திருக்கோணேஸ்வர ஆலய தெப்பத் திருவிழாவின் ஒரு காட்சி.

# புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்றுக் கூட்டம்!

## அமைச்சர் ஜெயலத், புலிகள் தரப்பினர் பங்கேற்றனர்

(வவுனியா)

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது தொடர்பாக நேற்று கிளிநொச்சியில், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சி, கனகாம்பிகை குளத்தில் உள்ள "தங்கோ" விடுதியில் நடைபெற்ற இம் மாநாட்டில், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா, மன்னார், மாவட்டங்களின் அரச அதிபர்களும், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், சின்னப்பா மாஸ்டர் மற்றும் பிராந்திய தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் - நிவாரண விநியோகத்திணை உரிய காலத்தில் வழங்குவது, மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது, அரச அதிகாரிகளுக்கிடையேயான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான பிணக்குகளை கையாள்வது உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (03)



மகளிர் விவகார உப குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் கிளிநொச்சி குருகுலத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சிறார்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

### கூட்டமைப்பு எம்.பிக்களுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

# பயங்கரவாத குழுப் பட்டியலிலிருந்து வெளிவருவதற்கு சிந்திக்க வேண்டும்

## விடுதலைப்புலிகளுக்கு அமெரிக்க தூதரக அதிகாரி பதில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கப்படாத நிலையில், வொஷிங்ரனில் நடைபெறும் கூட்டத்துக்குத் தம்மை அழைக்காததையிட்டு புலிகள் ஆச்சரியப்படத் தேவையில்லை என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஜோன் லொகோவ் தெரிவித்தார்.

வொஷிங்ரன் மாநாட்டுக்குத் தமக்கு அழைப்பு விடப்படாதது குறித்துப் புலிகள் அறிக்கை விடுத்தது தொடர்பாகவே, அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து வெளிவந்தால், இத்தகைய கூட்டங்களுக்கு அழைப்பது பற்றி நாம் பரிசீலித்துக்கொள்வோம்.

எவ்வாறு பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து வெளியேறுவது என்பது பற்றிப் புலிகள் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# முற்றத்திலிருந்த மிதிவெடி வெடித்ததில் பெண் காயம்

## சாவகச்சேரி கல்வயலில் சம்பவம்

சாவகச்சேரி கல்வயலில் முற்றத்தில் கிடந்த மிதிவெடியில் சிக்கி பெண் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, கல்வயல் பகுதியில் இப்பெண் சம்பல் இடிக்கவென உரலை முற்றத்தில் உருட்டியபோது உரல் மிதிவெடியில் சிக்கி, மிதிவெடி வெடித்தது.

இதனால் ரத்தினம் சரஸ்வதி (வயது 55) என்பவர் முகம், கை, கண் ஆகிய இடங்களில் காயங்களுக்கு உள்ளாகி - யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி பெண், அவ் வீட்டில் ஒரு வருடத்துக்கு மேலாக வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு வலயத்தில் பயிர்ச்செய்கை அனுமதிக்குமாறு அரசிடம் கோரிக்கை

## யாழ். விவசாயிகள் கூட்டாக விடுத்தனர்

உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இராணுவத்தினர்வசம் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களில் விவசாய முயற்சிகளில் ஈடுபட அனுமதிக்க வெண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட பிரதி அமைச்சரிடம், கமநல சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே சங்கானை விவசாய சம்மேளனம் இந்த மகஜரைக் கையளித்துள்ளது.

இம்மகஜரில் - தமது விவசாய முயற்சிகளுக்கேற்ற நியாயமான விலை கிடைப்பதில்லை என்றும், உரங்களின் விலை உயர்ந்துள்ளது தொடர்பாகவும், உற்பத்திப் பொருட்களை விற்பதற்கு சிறந்த சந்தைவாய்ப்பை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (சு,ரா)

# கடற்கண்காணிப்புக் குறித்து உடன்பாட்டில் போதியளவு கூறப்படாதது எமது தவறல்ல

## கண்காணிப்புக்குழு சட்ட ஆலோசகர்

எல்லோரும் இலகுவாகக் குற்றஞ்சாட்டும் தரப்பாக கண்காணிப்புக்குழு இருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் பெக்கா பிகர்வன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கடற் சம்பவங்கள் தொடர்பான விடயங்களில் தீர்வுகளைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது. பிரச்சினைகளுக்கு சர்வதேச வழிமுறைகளைக் கைக்கொண்டே தீர்வுகாண முயற்சிக்கப்பட்டது.

அண்மையில் கிழக்குக்கடலில் இடம்பெற்ற சம்பவங்களுடன் மூன்றாவது தரப்பு ஒன்று சம்பந்தப்பட்டிருப்பது உறுதியாகத் தெரிகிறது.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமையவே கண்காணிப்புக்குழு நடந்து கொள்கிறது. கடற்கண்காணிப்பு பற்றி உடன்பாட்டில் சிறியளவிலேயே கூறப்பட்டுள்ளது. இது போதாமல் உள்ளது எமது தவறல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அரச அதிபரிடம்....

இந்த விளக்கம் கோரல் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

ஏழு நாட்களுக்குள் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக விளக்கமளிக்குமாறு, யாழ். அரச அதிபர் பத்மநாதனுக்கு அமைச்சின் செயலாளர் கே.பி.எம். ஸ்பெல்டே வின்டே கடிதம் அனுப்பியுள்ளார்.

அதிகாரிகளுக்கு எதிரான புகார்கள் வந்தால் இவ்வாறு விளக்கம் கேட்கப்படுவது வழமையே என்றும் ஸ்பெல்டே மேலும் தெரிவித்தார்.

### பரவலாக நல்ல முடிவுகள்...

விசேட சித்திபெற்றுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியின் சிறந்த பெறுபேறாக -

ஆர்.சபேசன், ரி.விதூசன், ஆகிய இருவரும் 8A, 2B தர சித்தியையும், எஸ்.கோகுலன் 7A, 3B தர சித்தியையும், 4 பேர் 5A, 4B தர சித்தியையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, அனைத்துப் பாடசாலைகளுக்குமான பரீட்சை முடிவுகள் பெரும்பாலும் இன்று மதியம் கிடைக்கப்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (சு,ரா)

### ஜனாதிபதி சந்திரிகா...

எயார் லைன்ஸ் விமானத்தில் இந்திய நேரப்படி 9.05 மணிக்கு சென்னையைச் சென்றடையவுள்ள அவர், 9.30 மணிக்கு சென்னை - கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையான ராஜ்பவனுக்குச் செல்கின்றார்.

அங்கு - தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் முக்கிய சந்திப்பொன்றை நடாத்தும் அவர்- சென்னையிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டேல் ஒன்றில் தங்குகின்றார்.

பின்னர் - மாலை 5.45 மணிக்கு- சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் மூலமாக அவர் புதுடெல்கி பயணமாவார் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இன்றிரவு - புதுடெல்கியைச் சென்றடையும் ஜனாதிபதி சந்திரிகாவுடன், அவரது ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் செல்கின்றார். நாளையும், நாளை மறுநாளும் இவர் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா மற்றும் துணைப் பிரதமர் அத்வானி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

வியாழக்கிழமை இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுடனும் பிரதமர் வாஜ்பாயுடனும், எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தியுடனும் சந்திரிகா பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை - சமாதான முயற்சிகளைத் தான் எதிர்ப்பதாக வெளிவரும் செய்திகளுக்கு எதிரான சர்வதேச பிரசாரத்தின் முதற்கட்டமாகவே சந்திரிகா இந்தியாவுக்கு விஜயம் செய்வதாக இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**தேவை**

பிரபல கணணி அச்சகம் ஒன்றிற்கு ஒவ்செற் இயந்திர இயக்குநர்கள் மற்றும் Corel draw, Page maker தெரிந்த கணணி இயக்குநர்கள் (இருபாலாரும்) தேவை. வேலை பழகுவதற்கு ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-
விளம்பர இல:- 093, நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-768)

**மலிவு விற்பனை**

10",12",14",16" சைனா மெசின்கள் (China machine) வெல்டிங் பிளான்ட், றில்லர்கள், ஜெனரேட்டர்கள் ஏனைய எலெக்ரிக் சாமான்கள், விற்பனைக்குண்டு.

தொடர்பு:- கி.சுதாகரன்,
இல.20, 2 ஆம் ஒழுங்கை,
அரசடிவீதி, நல்லூர்
யாழ்ப்பாணம். (சி-750)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.